# உயிரைத் திருடாதே!



## இந்திரா சௌந்தர்ராஜன்



## 1

ஸ்ரீரங்கம் நிறைய மாறி விட்டது.

அட எந்த ஊர் தான் மாறவில்லை?

ஆனாலும் சீனுவுக்கு ஸ்ரீரங்கத்தின் மாறுதல் நிறைய கவலையைத் தந்தது.

நாலு வருஷம் கழித்து கல்ஃபிலிருந்து திரும்பி வந்திருக்கிறான்.

திருச்சி ஏர் போர்ட்டுக்கு மேல் விமானம் ஒரு ராட்சஸ பட்டாம்பூச்சியாக தழைத்து பறந்து இறங்கத் தொடங்கிய போதே ஆவலாக எட்டிப் பார்த்தான்.

அவ்வளவாக ஜலமில்லாத காவேரி, அழகியசிங்கரால் உயிர்பெற்ற அந்த ராஜகோபுரம், மலைக்கோட்டை என்ற மூன்றையும் மட்டும் மூன்று நான்கு வினாடி பார்க்க முடிந்தது.

அவை மட்டும் மாறவில்லை போல் தோன்றியது.

ஏர்போர்ட்டுக்கு வெளியே வந்து டாக்ஸி பிடித்து ஊரை நோக்கி ஓடத் தொடங்கிய போது வெளியே பார்க்க ஆரம்பித்தவன் தான்... பார்வையை எடுக்க முடியவில்லை.

சென்னை வந்து அவனோடு சேர்ந்து கொண்டு விட்ட அவன் சித்தப்பா பிள்ளை சுப்புவுக்கு அவன் பார்வையும் சிந்தனையும் பலத்த ஆச்சரியத்தைத் தந்து கொண்டிருந்தது.

''என்னத்தடா அப்படிப் பார்க்கறே?''

''ஊரைத்தான்!''

''நீ பொறந்து வளர்ந்து பாத்து பழகின ஊர்தானே... என்னத்த அப்படிப் பாக்கறே?''

''நீயும் எங்கையானா வெளிநாட்டுக்கு போய்ட்டுவா... என்னை மாதிரிதான் ...ப்பே... ஆமா ஸ்ரீரங்கம் ஸ்டேஷ ...ண்ட பிரிட்ஜ் கட்றாளாமே நிஜமாவா?''

''இதுல பொய் சொல்லி யாருக்கு என்ன கிடைக்கப் போறது?''

''அப்பாடா... இப்பவாவது கவர்மெண்ட்டுக்கு மனசு வந்ததே... அப்புறம்... ஏதோ கோவில் காம்பவுண்டு வாலை எல்லாம் சரி பண்ண கலைஞர் நிதி ஒதுக்கினாராமே... அப்படியா?''

''அவர் முதல்வர்... அவர் ஒதுக்காம வேற யார் ஒதுக்குவா?''

- சீனு வெளியே பார்த்தபடியேதான் கேட்டான்.

''நீ கொஞ்சம் என் முகரக்கட்டையை பார்த்துப் பேசு. ஆமா குவைத்துல இருந்து எனக்கு என்ன வாங்கிண்டு வந்துருக்கே?''

''எல்லாம்தான் இங்க பர்மாபஜார்ல கிடைக்கறதே... சனியன நான் சுமந்துண்டு வேற வரணுமாக்கும்?''

''போடா பைத்தாரா... இங்க இருக்கிறதெல்லாம் ஒரிஜினலா...?''

''உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? குவைத்துலையே நம்ம ஊர் டூப்ளிகேட் நுழைஞ்சாச்சு.'' - சிரித்தான்.

நாலு வருஷத்தில் அவனும் நிறைய மாறியிருந்தான். உருக்குத் துண்டாய் மீசை... கொஞ்சம் கவனம் எடுத்து வெட்டிக் கொண்ட கிராப்தலை... தொளக் புளக் என்று ஒருவிதமான சட்டை, ஜீன்ஸ்



பேண்ட். மலை ஏறுபவர்கள் போட்டுக் கொள்கிற மாதிரி ஒரு ஷூ...

''ஆள் ரொம்பத்தான் மாறிட்டே சீனு. பாட்டி பாத்தா புலம்பப் போறா...!''

''ஆமா... கிழவி அப்படியேதான் இருக்காளா?''

''பின்ன... அந்த ரங்கநாதர்கூட மாறுவார். ஆனா நம்ம கிழவி மாறவே மாட்டா. நீ ஊர்ல இருந்து எப்படி வருவியோ - எந்த மாதிரி வருவியோன்னு அவளுக்கு ஒரே கவலை...''

''இதுல கவலைப்பட என்ன இருக்கு...?''

''புரியலியா உனக்கு... அங்க இருந்து தனியாதான் வரியோ இல்லை துணை யோட வந்து நின்னுடப் போறியோன்னு தான்.''

''அடக் கன்றாவி... அங்க எல்லாம் கோஷாடா! மீறி தப்பா பார்த்தாலே கண்ண நோண்டிப்புடுவா! அடுத்து - நான் என்ன அந்த மாதிரி எல்லாம் பாக்கறவனா?''

- டாக்ஸி ராஜகோபுரம் தாண்டிக் கொண்டிருந்தது. சுப்புவும் சீனுவின் கேள்விக்கு பதில் சொல்லலானான்.

''நீ சொல்றது எனக்குத் தெரியும். கிழவிக்குத் தெரியுமா என்ன? அமெரிக்கா போன ராகவன் பிள்ளை ராமு, ஒரு வெள்ளைக்காரியோட வந்து நின்னான்.

கிருஷ்ணமாச்சாரி புள்ள, ஒரு கனடாகாரியோட வந்து நின்னான். அந்த மாதிரி நீயும் வந்துட்டா என்ன பண்றதுன்னு ஒரு பயம்தான்.''

''டேய் அதெல்லாம் அமெரிக்காலடா... கல்ஃப்ல பச்சையா ஒரு புல் துண்டைக்கூட

பளிச்சுன்னு பார்க்க முடியாது. வேல... வேல... வேலன்னு சாகணும். பளிச்சுன்னு நெத்திக்கு விபூதி, குங்குமம்கூட வெச்சுக்க முடியாது. கிழவிகிட்ட சொல்ல வேண்டியதுதானே?''

''அட நீ வேற... இந்த வீட்டு ராசியே இரண்டு பொண்டாட்டி ராசி. பொம்மனாட்டியே இல்லாத ஒரு பிரதேசத்துக்கு போனாலும் அங்க ஒரு பொம்மனாட்டி தேடி வந்து தாலியைக் கட்டிண்டு போய்டுவாளாம். கிழவி பயப்பட்றா...''

- சுப்பு சடைத்துக் கொள்ள டாக்சி அடையவளைஞ்சானில் நுழைந்து கொண்டிருந்தது.

''அப்புறம்... சித்ரா எப்படி இருக்கா?'' - சீனு தயங்கியபடியே கேட்டான். சுப்பு வெடுக்கென்று திரும்பிப் பார்த்தான். சற்று முறைத்தான்.

''ஏண்டா அப்படிப் பார்க்கறே?''

''பின்ன... ஏர்போர்ட்ட விட்டு இறங்கின உடனே கேட்க வேண்டிய கேள்விய இப்பப் போய் கேட்கறியேடா பாவி...''

''நான், நீயே அவளப்பத்தி சொல்லுவியாக்கும்னு நினைச்சேன்.''

''மண்ணாங்கட்டி... அவளப்பத்தி நான் எதுக்கு சொல்லணும்? நீதான் சொல்லணும். நீதானே அவளைக் க்ல்யாணம் பண்ணிக்கப் போறவன்? பாரு... வாசல்லயே அவ நின்னுண்டிருக்கறத...''

- சுப்பு சடைத்தபடி கைகாட்ட, வீதியில் ஒரு வீட்டு முகப்பில் தழைய வளர்ந்த மல்லிகைக் கொடியை ஒட்டி ஒரு பெண் மயில் நின்று கொண்டிருந்தது.

இந்த 2000த்திலும் பட்டுப் பாவாடை



தாவணியில் பார்க்க மிக ரம்மியமான தோற்றத்தில்...

கார் வந்து நிற்கவும் வெட்கப்பட்டுக் கொண்டு பின்னால் போனாள்.

சீனு அவளைப் பார்வையால் விழுங்கியபடியே இறங்கினான். அவனைத் தொடர்ந்து சுப்புவும் இறங்க - வீடே ஓடி வந்தது. அப்பா சடகோபன், அம்மா வத்சலா, தங்கை கீதா, மாமா ராஜகோபாலன் என்று எல்லோருமே பாய்ந்து வந்து ''வாடா சீனு வா வா... பிரயாணமெல்லாம் எப்படி இருந்தது? சௌகரியமா இருந்ததா?'' என்று பிறாயத் தொடங்கினார்கள்.

சீனுவும் முகபாவங்களில் அங்கீகாரத்தைக் காட்டியபடி உள்ளே நுழைய ஆரம்பித்தான்.

வராண்டாவிலேயே, கிழவி என்று சீனுவும் சுப்புவும் காரில் பேசியபடியே வந்த பாட்டி நின்று கொண்டிருந்தாள். காவி முட்டாக்கு போட்ட தோற்றம். உடம்பில் சதைப்பிடிப்பில் லொட லொடத்த தன்மை. ஆனால் குரலில் பிசிறில்லாத வெண்கலம்.

''வாடா... சீனா... வா வா...'' - பாசம் கொப்பளிக்கக் கூப்பிட்டாள்.

''ஆமாண்டாப்பா சீனா வா... இப்படியே போனா சீனா வா... பாகிஸ்தான் வான்னு ஒவ்வொரு நாடா கிழவி கூப்பிட ஆரம்பிச்சுடுவா. ஜோரா இருக்கும்.'' - ஊடே புகுந்து ஒரு ஜோக்கை கொளுத்திப் போட்டான் சுப்பு.

க்ளுக்கென்று சிரிப்பு சப்தம் கேட்டது.

திரும்பிய போது சித்ராதான் சிரித்துக்

கொண்டிருந்தாள். முகம் முழுக்க மஞ்சள் பூசின மாதிரி பொலிவு.

பாட்டிக்கு உடனேயே கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

''ஆமாம்... அவன் பெரிசா ஜோக்கடிச்சுட்டான்னு நீ சிரிக்கிறியோ... ரொம்ப சிரிக்காதே - பல்லு சுளுக்கிண்டுடப் போறது. இந்த பாட்டி தயவு வேணும் ஞாபகம் வெச்சுக்கோ...''

''என்ன உன் தயவு... என் அத்தான் நான் சொல்ற மாதிரிதான் கேட்பார், தெரிஞ்சுக்கோ.'' - சித்ராவும் பதிலுக்கு சீறினாள்.

''உன் அத்தானா... என்னடி உரிமை கொண்டாட்றே...?''

''பின்ன அவ உரிமை கொண்டாடாம? இனிமே அவதானே அவனுக்கு எல்லாம்...'' வக்காலத்து, பக்கவாட்டில் சீனுவின் அம்மா வத்ஸலாவிடம் இருந்து வந்தது. சீனு வெட்கத்தோடும் ஆசை யோடும் அதன் நிமித்தம் சித்ராவை ஒரு பார்வை பார்த்ததில் அப்படியே ஒருபடி தேன் நழுவியது.

''போறுண்டா. வந்ததுல இருந்து சைட் அடிச்சிண்டு - கிணத்து தண்ணியை ஆத்து வெள்ளமா கொண்டு போய்டப் போறது?''

- சுப்பு அவனது ஜொள்ளொழுகலை அணை போட்டு வேறு மாதிரி இழுத்துச் சென்று ஹாலில் உட்கார்த்தி வைத்தான்.

ஆனால் இந்த 'கிணத்துத் தண்ணி'யை ஒரு ஆற்று வெள்ளம் எப்படிக் கொண்டு போகலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தது.



# 2

சித்ரா போட்டோவில் சிரித்துக் கொண்டிருந்தாள். அதுவும் ஒரு குரூப் போட்டோவில் - பல பெண்களுக்கு நடுவில்! காலேஜில் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் எடுத்திருக்க வேண்டும். கையில் புத்தகம் எல்லோரிடத்திலும் இருந்தது.

எல்லா பெண்களுமே ஜொலித்தார்கள். இளமை பிதுங்கி வழிந்து கொண்டிருந்தது.

போட்டோவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த டைரக்டர் சேகரின் இன்னொரு கையில் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. அவன் பார்வையோ அவளையே வெறித்தபடி இருக்க, அவனோ மொட்டை மாடியின் கைப்பிடிச் சுவர் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

வெளியே இருட்டு கட்டும் சூழல். அந்திவானம் ஹோலிப் பண்டிகை நடந்த மைதானம் போல பல வண்ணக் கலப்பில் இருக்க - அந்த மொட்டை மாடியில் சேக ரைப் பார்த்தபடி பிரவேசித்துக் கொண்டி ருந்தான் சுகுமார்.

''என்னடா... ஏகாந்தமா வந்து உட்கார்ந்துட்டே?''

கேள்விக்கு பதிலாக போட்டோவை சுகுமாரை நோக்கி நீட்டினான் சேகர். வாங்கிப் பார்த்தவன் புரிந்தது போல கேட்டான்.

''என்ன... உன் ஹீரோயின் கிடைச்

கட்டாளா?''

''ஆமா... அதுல எந்த பொண்ணுன்னு கரெக்டா சொல்லு பார்க்கலாம்.''

சுகுமாரின் கைகள், சேகரின் ரசனையை மிக நுட்பமாக அறிந்தது போல சித்ராவை காட்டிற்று.

சேகர் அசந்து போனான்.

''சுகு... எப்படிடா என் டேஸ்ட் தெரிஞ்சு சொன்னே?''

''அதான் சுகுமார். ஆமா பொண்ணு யார்?''

''பொண்ணு பேர் சித்ரா. டிஃபிக்கல் பிராமின் பொண்ணு. என் தங்கை ரேணுகாவோட காலேஜ்ல படிச்சவ. யதார்த்தமா இந்த போட்டோ கண்ணுல பட்டது. பட்ட நிமிஷத்துல இருந்து பாடாப்படுத்திக்கிட்டு இருக்குடா...''

''பின்ன... உன் கற்பனைல உதிச்ச நாயகி என்ன லேசுப்பட்டவளா?''

''ஆனா ஒரு விஷயம் ரொம்ப உதைக்கறதுடா...''

''என்ன... அந்தப் பொண்ணு நடிக்க சம்மதிப்பாளாங்கறதா?''

''ஆமாம்... ரேணுகிட்டே அவளைப் பத்தி கேட்டேன். காலேஜ் புரொக்ராம்ஸ்ல பாத நாட்டியம்லாம் ஆடினவளாம். ஆர்ட்லைன்ல நல்ல இண்ட்ரஸ்ட் இருக்குங்கறது தெரிஞ்சு போச்சு. ஆனா குனிஞ்ச தலை நிமிராத பொண்ணாம். ஃபேமிலியும் படு ஆர்தடாக்ஸாம். அதான் கவலையா இருக்கு.''

''இதோ பார் சேகர்... இன்னிக்கெல்லாம் யாருமே ஆர்தடாக்ஸா இருக்க முடியாது. அப்படியே இருந்தா தான்



என்ன... அதுக்கும் கலைக்கும் என்ன சம்பந்தம்?''

''ஸோ... முட்டிப் பார்த்துடுங்கறே?''

''பின்னெ... கதை, திரைக்கதை, வசனம் ரெடி. ஃபைனான்ஸ் ரெடி. ஹீரோயின் மட்டும் தானே உன் விஷயத்துல ரெடி இல்லெ.''

''ரைட்... உட் யு ப்ளீஸ் நீயும் வாயேன்.''

''ஷ்யூர்!''

இருவரின் சம்பாஷணையும் முடிந்து மாடியை விட்டு நீங்கத் தொடங்கினார்கள்.

இனி சேகர் பற்றி...

தற்போதைய சினிமா உலகின் நம்பிக்கைக்குரிய இயக்குநர்களில் ஒருவன். பிறந்து வளர்ந்த நாள் முதலாக சினிமா விசுவாசி. பாடப்புத்தகத்தை விலைக்கு போட்டு விட்டு அந்த காசில் காலைக் காட்சிக்கு போன அனுபவங்கள் நிறைய்ய... அப்படி நம்பி நேசித்த சினிமா இறுதியில் அவனைக் கைவிடவில்லை. காலேஜ் முடிந்த கையோடு சென்னைக்கு போனவன் அங்கே பார்க்காத டைரக்டர் இல்லை.

இறுதியாக ஒரு பெரிய இயக்குநர் ஓர் ஓரமாக இடம் கொடுத்தார். இன்று அந்த இடத்திற்காக அவன் பெறும் சம்பளம் ஆவரேஜாக இருபது லட்சம்.

ஒரு கதை வெற்றிபெற திரைக்கதை சிறப்பாக இருந்து விட வேண்டும் என்பது சேகரின் முதல் நம்பிக்கை. அதற்கடுத்து அதில் நடிப்பவர்கள்... நடிகர் நடிகைகள் அந்த பாத்திரத்துக்கென்றே பிறந்தவர்களாக இருக்க வேண்டும். பிடித்து இழுத்து வந்ததாக இருக்க கூடாது.

அந்த வகையில் 'காத்திருந்தவள்' என்று ஒரு கதைக்காக சேகரும் காத்திருக்கிறான், காத்திருக்கிறான் - அப்படி ஒரு காத்திருப்பு.

திருச்சிதான் பிறந்து வளர்ந்த ஊர்.

இடையில் ஒரு முறை வந்து போகலாம் என்று தீர்மானித்த இடத்தில்தான் தங்கை ரேணுகா மூலம் சித்ரா புகைப்படத்தில் மாட்டினாள்.

நிஜத்தில் மாட்டுவாளா?

---

# 3

---

கிட்டத்தட்ட அடைய வளைஞ்சானே வந்து சீனுவைப் பார்த்து நலம் விசாரித்து விட்டுப் போனது. போகும் போது ஒரு ஏக்கப் பார்வை வேறு... சென்ட்டோ, பேண்ட் பிட்டோ, இல்லை அல்பமாக ஒரு டார்ச் லைட்டாவது தரமாட்டானா என்கிற மாதிரியான பார்வை அது...

அடைய வளைஞ்சானில் ஆறு வீடு இருக்கிறது ஆராவமுதனுக்கு. ஆபீசிலும் நாப்பதாயிரம் சம்பளம். அந்த நபர்கூட ஒசி ஆசையைக் கண்ணில் காட்டினார்.

கிழவி பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

அவ்வப்போது காக்கை விரட்டுகிற மாதிரி கூ... கூ! என்று விரட்டவும் தவறவில்லை.

பின் சீனு உள்ளே வந்த நேரமாகப் பார்த்து மளாரென்று அவன் தலையில் ஒரு கிண்ணம் எண்ணெயைக் கவிழ்த்தாள்.

'அய்யோ பாட்டி... என்ன காரியம் பண்ணிட்டே?'' - அலறினான் சீனுவும்.



''போடா பைத்தாரா. கடல் கடந்து போய் அங்க வருஷக்கணக்கா வேற இருந்துட்டு வந்துருக்கே. அது எத்தனாம் பெரிய தோஷம் தெரியுமா?''

''தோஷமா.''

''பின்ன... பிராமணன் சமுத்ரம் தாண்டலாமாடா?''

''அய்யோடா... இப்படி எல்லாம் வேற இருக்கா...?''

''இப்படி எல்லாம் இருக்காவா? சீதையை ராமன் தீக்குளிக்கச் சொன்னது எதுக்காகங்கறே?''

''எதுக்காக?''

''அவளோட தோஷம் போகணும்கறதுக்காகவும் தான்.''

- எண்ணெயை முகம், கை-கால் என்று பூசியபடியே கிழவி பஞ்சாங்கக் கதை படித்தாள்.

அப்படியே சீனு வெறித்தான். நடுவில் காதை உரசியது ஒரு வெள்ளிக் கொலுசின் சப்தம். விசுக்கென்று திரும்பிப் பார்த்தான். சித்துதான்...!

''சித்...'' - கூவினான். அவள் நெருங்கி வந்து அவன் எண்ணெய்த் திருக்கோலம் பார்த்து நன்கு ரசித்தாள்.

''நன்னா தேச்சுவிடு பாட்டி... அங்கலாம் எண்ணெய் தேய்ச்சுக்க முடிஞ்சதோ முடியலையோ'' என்று ஏற்றிவிட ஆரம்பித்தாள்.

கிழவி என்ன நினைத்தாளோ - சட்டென்று எண்ணெய்க் கிண்ணியை அவள் கைகளில் தந்தாள்.

''என்ன பாட்டி...''

''மிச்சத்த நீ தேச்சி விடுடி...''

''நானா?'' - அதிர்ந்து போகத் தொடங்கினாள் அவள்.

''நீயேதான்... ஒண்ணும் தப்பில்லை. தேய்ச்சு விடு.''

''அய்யோ... யாரானா பார்த்தா...''

''அடிப்பாவி... சாதாரணமா சின்னஞ் சிறுசுகள் இப்படி நடந்துக்குங்கள். பெரியவாதான் பார்த்துட்டு இப்படி கேள்வி கேட்பா. இங்க நீ என்னைக் கேக்கறியா? உம்... சான்ஸை யூஸ் பண்ணிக்கோ.''

- பாட்டி இங்கிதமாக விலக, சித்ரா வெட்கமுடன் சீனுவைப் பார்க்கத் தொடங்கினாள்.

நல்ல அனுசரணையான வேளை...

எல்லோரும் ஏதேதோ காரியமாக எங்கெங்கோ இருந்தார்கள்.

இதுதான் சாக்கு என்று சீனு அவள் வளையல் கரத்தைப் பிடித்து இழுத்தான்.

''விடுங்கோ... விடுங்கோத்தான்...'' என்று அவள் வெட்கம் காட்டினாள். இந்த மாதிரி வேளையில் வெட்கம் காட்டாதவளும் ஒரு பெண்ணா என்ன?

அதற்காக ஒரு ஆணும் விட்டுவிடுவானா என்ன? அவளது வெட்கம்தானே அவனைப் பரவசப்படுத்தும் சரக்கு. சீனுவும் கட்டி இழுத்தான்.

''சித்து... நீ எனக்குப் போட்ட லெட்டரை எல்லாம் நான் பத்ரமா பைண்ட் பண்ணி வெச்சிருக்கேன் தெரியுமா?'' என்று அவளை இறுக்க அணைத்தபடி எண்ணெய் உடம்போடு அவள் காதில் குழறினான்.

''விடுங்கோத்தான்... யாராவது பாத்துடப் போறா...''



வந்துருக்கேன். அதை நினைச்சு பாத்தியா நீ?''

''அதுக்காக இப்படி கட்டிப் பிடிச்சு சினிமா மாதிரி ரொமான்ஸ் பண்ண ணுமா?''

''என்ன தப்பு அதுல... எனக்கு பெண்டாட்டியா வரப்போறவகிட்ட தானே பண்றேன்?''

''எல்லாம் கல்யாணத்துக்கு அப்புறமா பண்ணுங்கோ. எனக்கு வெட்கமா இருக்கு, விடுங்கோ...'' - அவள், அவன் பிடியில் இருந்து விலக முயல, எண்ணெய்க் கிண்ணி நழுவி மேலே கொட்ட, அவள் கழுத்து மார்பு எல்லாம் அதனால் நனைய.

''அய்யய்யோ'' என்று அவள் பதற, சப்தம்கேட்டு அந்த பக்கம் வந்த அம்மா வத்சலா எட்டிப் பார்க்க, அந்தக் காட்சி அவனையும் வெட்கத்தில் பிடித்துத் தள்ளியது.

குதிரைக் குட்டிபோல கனைத்தாள். சப்தம் இருவரையும் வேகமாகப் பிரித்து விட்டது. சித்ரா வெட்கப்பட்டுக் கொண்டே பாத்ரூம் நோக்கி ஓடத் தொடங்கினாள். சீனுவின் மூச்சுக் காற்று அடுத்த கணம் அநியாய வெப்பத்தோடு அவனிடமிருந்து வெளிப்படத் தொடங்கியது. வத்சலா ரசித்தபடியே சமையல் கட்டுக்குள் நுழைந்தாள். வெந்நீர் தளைத்துக் கொண்டிருந்தது.

''நல்ல புள்ள இவன்... சீக்கிரமா கல்யாண ஏற்பாடு பண்ணணும். விட்டாக்கா வீட்டையே பிருந்தாவனமாக்கி ஆடிப்பாட ஆரம்பிச்சுடுவா'' என்று முணுமுணுத்தது உதடு.

''யாரு?'' என்று உடனே ஒரு கேள்வி. திரும்பினால் சடகோபன் நின்று கொண்டிருந்தார். ஸ்ரீ சூரணத்தை உள்ளங்கையில் வைத்துக் கொண்டு தண்ணீரைத் தேடியபடி இருந்தார். பக்கமாக சொம்பில் இருந்ததை எடுத்து அதை குழைக்கத் தொடங்கினார்.

''குளிச்சாச்சாக்கும்?''

''இன்னிக்கு லேட்டு வத்சலா. ஆமா... யாரு பிருந்தாவனமாக்கிடுவான்னே?''

- அவர் ஒன்றும் தெரியாத மாதிரி கேட்க, வத்சலா முகம் அவரை உடனேயே கூர்மையாகப் பார்த்தது.

''என்ன வத்சலா பார்க்கறே... பதில் சொல்லு.''

''ஆமா... உங்களுக்கு தெரியாதாக்கும்?''

''தெரியலடி - அதான் கேக்கறேன்.''

''நான் உங்க பிள்ளையைத்தான் சொன்னேன்.''

''என்ன பண்ணினான்?'' - சடகோபன் குழைத்த ஸ்ரீசூரணத்தை நெற்றிக்கு இட்டுக் கொண்டபடியே கேட்க, வத்சலா முகம் மெல்ல மாறத் தொடங்கியது. அவர் எங்கே வருகிறார் என்று மெல்ல புரியத் தொடங்கியது.

''என்னன்னா ஒண்ணும் தெரியாத மாதிரி கேக்கறேள்?''

''நிஜமா தெரியல வத்சலா...'' - நறுக்குத் தெறித்த மாதிரியான பதிலோடு நிமிர்ந்தார் அவர். அவளிடம் லேசான தடுமாற்றம். சில வினாடிகள் மௌனம்.

''என்ன வத்சலா பேச்சக் காணோம்?''

''எனக்கு என்ன பேசறதுன்னு தெரியல.''

''சரி நானே பேசறேன். சீனு உன்



அண்ணா பொண்ணோட ஜல்சா பண்ணினானாக்கும்?''

- கேள்வியே ஒரு மாதிரி இருந்தது. கன்னத்தில் அறைந்தது. வத்சலா பதில் பேசாமல் வெறித்தாள்.

''என்ன பாக்கறே? சொல்லு.''

''என்னத்த சொல்றது... நீங்களா இப்படி கேக்கறேள்?''

''ஏன்... கேட்கக் கூடாதா... நான் உனக்கு ஜாடை மாடையா சொன்னா புரியாதா வத்சலா? நேரா சொல்லணுமா?''

- வத்சலாவிடம் வெறுப்பு தொடர்ந்தது.

''அப்படி வெறிக்காதே. இப்ப நேராவே சொல்லிடறேன். சீனுவுக்கும் அந்த பொண்ணுக்கும் சரிப்பட்டு வராது. உங்கண்ணன் ஒரு சமையல்காரன். அதனால ஸ்டேட்டஸ் பார்த்து நான் பேசறதா நீ நினைக்காதே. நினைச்சாலும் தப்பு இல்ல.

என் புள்ள லட்ச லட்சமா சம்பாதிச்சவன். அவன் படிப்புக்கு இங்கேயே, இனி சம்பாதிக்கப் போறவன். குவைத்துல அவனோட காண்ட்ராக்ட்டும் முடிஞ்சு போயாச்சு. எப்படின்னு கேக்கறியா?''

- வத்சலாவின் கண்களில் ஈரம் ஊரத் தொடங்கிற்று.

''ஆடிட்டர் நரசிம்மனைத் தெரியும்தானே?''

- அவள் தலை ஆடிற்று.

''அவரோட ஆபீஸை இனி பாத்துக்கப் போறது சீனுதான்.''

- வத்சலா உடனே கணிசமான அதிர்ச்சியைக் கண்களில் காட்டினாள்.

''ஆமா... அவருக்கு ஒரே பொண்ணு! பேர் ரேவதி. அவளும் சி.ஏ. பாஸ்

பண்ணினவ. சீனுவும் சி.ஏ. முடிச்சவன், இவா ஒண்ணு சேர்றதுதான் ஸ்லாக்யம் - தங்கத்துல வைரம் சேர்ந்த மாதிரி. உன் அண்ணன் பொண்ணு டிகிரி முடிச்சிருக்கா. அவ்வளோதான். நான் சீனுவோட எதிர்காலத்தை மனசுல வெச்சுண்டு இதைச் சொல்றேன். தப்பா புரிஞ்சுக்காம சரியா புரிஞ்சுண்டு யோசிச்சு பார். மீறினா என்ன நடக்கும்னு நான் உனக்கு சொல்லத் தேவை இல்லை. உன் உடம்புலையும் அவன் உடம்புலையும் இருக்கற சூட்டுத் தழும்புகள் சொல்லும்.''

சடகோபன் சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டு மளமளவென்று ஸ்ரீசூரணம் குழைத்த கையைக் கழுவிக் கொண்டார். கையை மட்டுமா கழுவுகிறார்?

இனி அவரிடம் எதுவும் பேச முடியாது. பேசுவதில் பயனும் கிடையாது. எப்பொழுதும் அந்த வீட்டைப் பொறுத்த வரை அவர் முடிவு செய்தால் செய்தது தான். இருந்தும் வத்சலா கலங்கிய கண்களுடன் கேட்டாள்.

''அப்ப நம்ம சீனுவுக்கு அந்த ஆடிட்டர் பொண்ணைத்தான் பாக்கப் போறேளா?''

''ஆமா...''

''சித்ரா அவனையே நினைச்சுண்டு இருக்காளே?''

''நினைச்சுண்டு தானே இருக்கா. மனசை மாத்திக்கச் சொல்லு.''

''அது என்ன அவ்வளவு சுலபமா?''

''அவளா நினைச்சதுக்கு நானும் நீயும் என்னடி பண்ண முடியும்? இதோ பார் வத்சலா..! லைஃப்ல சுலபமா சுலபமில்லையாங்கற கேள்விக்கெல்லாம்



இடமே இல்லை. இப்ப என்னையே எடுத்துக்கோ... உப்பு இல்லாத விஷயத்த நான் தொடக்கூட மாட்டேன். உடம்புக்கு வந்தது. டாக்டர் உப்பைக் குறைச்சாத்தான் உடம்பு சரியாகும்னு சொன்னார். நான் குறைச்சுக்கலையா...?

நிர்ப்பந்தம்னு ஒண்ணு ஏற்பட்டா எல்லாமே சுலபம்தான். எதுவும் முடியும். இப்ப என்ன உன் அண்ணன் பொண்ணுக்கு மாப்ளையா கிடைக்காமப் போயிடுவார். நானே பாக்கறேன்'' - சொல்லிவிட்டு போயே போய் விட்டார்.

விஷயம் கிழவி காதில் விழுந்ததோ என்னவோ, வாடிய முகத்தோடு சமையல் கட்டுக்குள் அவள் பிரவேசம் நிகழ்ந்தது.

ஏற்கனவே சதை தளர்ந்த துவண்ட முகம். அதில் பிள்ளையின் பேச்சால் பரவிய அதிர்ச்சியின் தடயங்கள்.

''உங்க பிள்ள பேசினத கேட்டேளா?'' - வத்சலா சருவம் ஒன்றை எடுத்துக் கழுவியபடியே கேட்டாள்.

''கேட்டேன் கேட்டேன்...''

''என்ன பண்ணலாம்?''

''என்ன பண்ணலாம்னா...? இவன் ஆசைப்பட்டா ஆச்சா? சீனு என்ன நினைக்கறான்னு தெரிய வேண்டாமா?''

''அவன் என்னத்த நினைப்பான். சித்ரா சித்ரான்னுல்ல சாகறான்.''

''பாப்போம்... இப்ப இந்த விஷயம் அவன் கைல தான் இருக்கு.'' - கிழவி பிரச்சினைக்கு வேறு மார்க்கம் காட்டிப் பேசினாள். வத்சலா முகத்தில் அதன் காரணமாக துளித் தெம்பு பரவியது. இதற்குள் அவனே எண்ணெய் வடியும்

முகத்தோடு சமையல் கட்டுக்குள் நுழைந்தான்.

''வாடா... உன்னைத்தான் நினைச்சேன் வந்துட்டே...''

''நான் வந்தது இருக்கட்டும். வெந்நீர் ரெடியா?''

''அது இருக்கட்டும். உங்கிட்ட ஒண்ணு கேட்கணும்.''

''ஒண்ணு என்னம்மா ... ஒன்பது கேளு. நீ கேக்காம யார் கேப்பா?''

''அது இல்லடா... இது ஒண்ணும் நீ துபாய்ல இருந்து வாங்கிண்டு வந்துருக்கற சாமான், சமாச்சாரம் இல்லை.''

''சரி... விஷயத்துக்கு வா - எண்ணெய் கண்ணுல இறங்கி எரிய ஆரம்பிச்சாச்சு.''

''எண்ணெய் இறங்கி எரியலாம். ஆனா என்ன மாதிரி எரியப்படாது.''

''என்னம்மா இது டயலாக். யார் எழுதினது?''

''விஷயத்த கேள்... உங்கப்பா உனக்கு கல்யாணத்துக்கு பொண்ணு பார்த்துருக்கார் தெரியுமா உனக்கு?''

''அதான் உள்ள நுழையும்போதே பாத்துட்டேனே... இவர் வேற தனியா பார்க்கணுமா?''

''நீ சித்ராவைச் சொல்றே... ஆனா அவர் பார்த்துருக்கற வரன் வேற...''

- வத்சலா சொன்னதில் சற்றே சூடான சீனு எண்ணெய்க் கண்ணோடு பெற்றவளை முறைத்தான்.

''ஆமாம்... ஆடிட்டர் நரசிம்மன் தெரியும்தானே?''

''அவருக்கென்ன?''

''அவரோட பொண்ணத்தான்



பார்த்துருக்கார்...''

''யாருக்கு...?''

''யாருக்கா...? உனக்குத்தாண்டா...''

''எனக்கு இருக்காதும்மா. அவர் தனக்கு பாத்துண்டுருப்பார். இது நீ கவலைப்பட வேண்டிய விஷயம்.''

''என்ன விளையாட்றியா...?''

''நான் விளையாடல. அவர்தான் விளையாட்றார். எனக்குன்னு ஒருத்தி இருக்கா. திடீர்னு இப்படி குட்டையைக் குழப்பற வேலையெல்லாம் வேண்டாம். போய் அவராண்ட சொல்லு.''

- சீனு தீர்க்கமாக சொல்லிவிட்டு அங்கிருந்து விலகினான். வத்சலாவிற்கு அவனது அந்தத் தீர்மானம் பிடித்துப் போனது. 'பெருமாளே...' என்றாள் உற்சாகத்தோடு. இன்னொரு 'பெருமாளே' சப்தம் கிழவியிடமிருந்து அதே அளவு உற்சாகத்தோடு கேட்டது. கூடவே அதில் கலக்கமும் இருந்தது.

---

## 4

---

தேய்ந்து நின்ற காரில் இருந்து இறங்கினான் சேகர். கூடவே சுகுமார்.

ஸ்ரீரங்கத்து தெருவின் நீள அகலத்தில் - தெரு என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்கிற ஒரு இலக்கண சுத்தம் இருப்பதுபோல ஒரு எண்ணம் தோன்றிற்று.

நடுவில் வீட்டு வாசலில் நின்ற காரில் இருந்து இறங்கிய சேகரையும் சுகுமாரை

யும் பார்த்தபடியே வெளியே வந்தார் சித்ராவின் அப்பா ராஜகோபாலன்.

அடுப்படியில் வெந்த கடுப்பு. உடம்பு முழுக்க படிந்து கிடந்தது.

''யார் நீங்கோ? என்ன வேணும்?'' - அவரிடம் கேள்வி.

''இங்க ராஜகோபாலன்னு...?''

''நான்தான். உள்ள வாங்கோ... என்ன விஷயம்?'' - பலவித கேள்விகள் ஒரே கேள்வியாக முட்டி மோத, சேகர் கூலிங் கிளாஸை கழற்றி பாக்கெட்டில் போட்ட படி அந்த வீட்டினுள் நுழையலானான்.

நடுஹாலில் ஊஞ்சல். அதில் கருந் தேக்கில் பலகை. பலகைமேல் சித்ரா படுத்தபடி குமுதம் படித்துக் கொண்டி ருந்தாள்.

அந்தக் கோலமே சேகரை என்னவோ செய்தது. சுகுமாரை திரும்பிப் பார்த்தான். அவனது கதையில் கூட அப்படி ஒரு காட்சி இருக்கிறது. அதில் அப்போதே சித்ரா நடிப்பதுபோல பிரமை தட்டிற்று.

திடீரென்று இரண்டுபேர் பேண்ட்டும், ஷர்ட்டுமாய் வாட்டசாட்டமாய் வந்து நிற்பதைப் பார்த்து சித்ரா வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

அப்படியே உள் ஓடி இருண்ட அறையின் கதவு பின் போய் ஒளிந்தாள்.

''உட்காருங்கோ... என்ன விஷயம்னு சொல்றேளா...?'' - ராஜகோபாலன் மரியாதையாகக் கேட்க, சேகர் நிறையத் தயங்கினான். பின் ''நான் சினிமா டைரக்டர் சேகர்'' என்றான்.

''அப்படியா?'' - மிக சாதாரண எதிர் [illegible] அவரிடம். அதுவே சேகரை



என்னவோ செய்தது.

''சார் பெரிய டைரக்டர். கேள்விப்பட்டி ருப்பீங்களே. இப்பக்கூட இவரோட 'தேடாதே தொலைந்து போவாய்' படம் சூப்பர் ஹிட்...'' - சுகுமார் ஊடே புகுந்து சற்று உளறி விட்டான்.

''அப்படியா... நேக்கு அவ்வளவா சினிமா பத்தி எல்லாம் தெரியாது. எம்.ஜி.ஆர்... சிவாஜி - அப்புறமா ரஜினி, கே.ஆர்.விஜயான்னு சிலரைத் தெரியும்.''

''அப்போ இந்த ஜெனரேஷன்ல இருக்கற அஜித், விஜய், பிரஷாந்த் எல்லாம்...''

''என் பொண்ணத்தான் கேட்கணும்.''

''அவங்க சினிமா பாப்பாங்களா...?''

''அதான் இப்ப அவ தொழிலே. பாத்தா கூட பரவால்ல. அதுல சினிமாக்காரா பண்ற மாதிரி எல்லாம் இவளும் பண்ணிப் பாப்பா. அதான் டி.வில, ரூபாய்க்கு மூணு சாமான் மாதிரி தினசரி சினிமாவா போட்டுண்டு இருக்காளே... அது சரி நீங்க வந்த விஷயத்தை சொல்லவேயில்லையே...''

''ஒண்ணுமில்ல. சார். அடுத்து ஒரு சினிமா எடுக்கப் போறார். 'காத்திருந்தவள்'ங்கறது படத்தோட பேர். அதுல நடிக்க ஒரு நல்ல ஹீரோயின் வேணும். அதான்...''

''அதுக்கு நான் என்ன பண்ணணும்?''

''உங்க பொண்ணும் என் தங்கையும் கிளாஸ்மேட்ஸ். அவ மூலமாத்தான் உங்க பொண்ணு போட்டோ எனக்குக் கிடைச்சுது. பாத்த நிமிஷமே அவங்கதான் என் ஹீரோயின்னு முடிவு செய்துட்டேன்.''

''என்னது... என் பொண்ணு ஹீரோயினா?'' - அந்த பிராமணர் முகம்

கேள்வியோடு கோணிப் போனது.

''ஆமாம்... நீங்க ஆசாரமான குடும்பம்னு தெரியும். இருந்தும் வந்துருக்கேன்னா ஒரு நம்பிக்கைதான்.''

''என்ன சார் இது. நான் அவளுக்கு கல்யாணம் பண்ணி வைக்கிற எண்ணத்துல இருக்கேன். நீங்க இப்பப் போய் சினிமா ஹீரோயின்னு சொல்லிண்டு... நல்ல வேளை இப்ப வீட்டுக்குள்ற யாரும் இல்லை. உங்களையும் அக்கம் பக்கம் பாத்துடலை. நீங்க புறப்படுங்கோ.''

''நீங்க இப்படி எல்லாம் பேசுவீங்கன்னு தெரியும். பதட்டப்படாம யோசிச்சு பதில் சொல்லுங்க. நான் ஆபாசமாவோ கவர்ச்சியாவோ படம் எடுக்கற டைரக்டர் இல்லை. இதை நீங்க புரிஞ்சுக்கணும்.''

''ஐயா... நீங்க காவியத்தையே எடுத்தாலும் சரி. எங்களுக்கு இதெல்லாம் சரிப்பட்டு வராது. தயவு செய்து கிளம்புங்கோ...''

அவர் கைகளைக் கூப்பினார். உள்ளிருந்து மேலும் ஒரு பெண்மணி தலையைத் துவட்டியபடி வந்து அவரை 'இவர்கள் யார்' என்பதுபோல் பார்க்க, சித்ராவும் அறை இருட்டுக்குள் ஒளிந்தவளாக பார்த்துக் கொண்டுதானிருந்தாள்.

''பூமா... இவர் ஒரு பிரபலமான டைரக்டராம். நம்ம சித்ரா, இவர் எடுக்கப்போற படத்துல ஹீரோயினா நடிக்கணுமாம். கேட்டு வந்துருக்கார். நல்லவேளை யாரும் பாத்துடலை. எதையும் கேட்டுடலை. அதான் முதல்ல கிளம்புங்கோன்னு சொல்லிண்டிருக்கேன்.''

அவளும் அடுத்த நொடி கணிசமான



அதிர்ச்சியைக் காட்டினாள்.

சுகுமார் அவளைப் பார்த்துவிட்டு பேச்செடுத்தான்.

''அம்மா... இப்ப நடிக்கறதுங்கறதும் ஒரு தொழில்தான். ஆபீஸ்க்கு போற மாதிரிதான் இதுவும். சார் அநாவசியமா பயப்படறார். நீங்களாவது சொல்லுங்களேன்.''

''நானா...? நாராயணா! இதோ பாருங்கோ. நீங்க என்ன சொன்னாலும் சரி. எங்களுக்கு அதெல்லாம் சரிப்பட்டு வராது. தப்பா எடுத்துக்காம புறப்படுங்கோ.''

அவளிடம் வியர்வையே துளிர்த்து விட்டிருந்தது. அவர்கள் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ஏமாற்றத்தோடு புறப்படத் தொடங்கினார்கள்.

வாசல் தாண்டும் போது அக்கம் பக்கத்து பார்வை எல்லாம் கார் மேலேயே இருந்தது. சேகர் கூலிங் கிளாஸை எடுத்து போட்டுக் கொண்டான்.

அப்பொழுது பக்கத்து வீட்டு பத்மநாபன் என்பவன் பார்த்து விட்டு சேகரை அடையாளம் கண்டு கொண்ட மாதிரி நெருங்கி வந்தான்.

''சார் டைரக்டர் தானே...?''

- சேகரிடம் மௌன அங்கிகாரம். கூடவே தன்னை அவன் அடையாளம் கண்டு கொண்ட சந்தோஷம்.

''கிளாட் டு மீட் யூ சார். எங்க சார் இவ்ளோ தூரம்?''

''ஒண்ணுமில்லை. சும்மாதான். ராஜ கோபாலன் சாரை பாத்துட்டு போக வந்தேன்.''

''என்ன... எதாவது சமையலுக்கு புக்கிங்கா? மாமா பிரமாதமா சமைப்பார்.''

- பத்மநாபன் இம்மீடியட்டாய் ஒரு சர்ட்டிபிகேட்டை அளித்தான்.

சேகரின் இங்கிதம் ஆமோதிப்பதாக தலையை அசைத்தது.

''இதுக்கெல்லாம் எதுக்கு சார் நீங்க நேர்ல வந்துண்டு? உங்க பி.ஏ. வந்தா போதாதா...''

''ஏன்... நான் வரக்கூடாதா?''

''வரலாம். ரொம்ப பிசியான டைரக்டரா இருக்கேளே, டைம் இருக்குமோ இருக்கா தோன்னுதான் அப்படிச் சொன்னேன்.'' - பத்மநாபனிடம் வழிசல். சேகர் சிரித்தபடி காரில் ஏற ''சார்ர்'' என்றான், அந்த வற்றாத வழிசலோடு... சேகர் பார்வையே என்ன என்று கேட்டது.

''அடுத்து என்ன படம் சார் எடுக்கப் போறேள்?''

''அடுத்து... அடுத்து... இன்னும் முடிவாகலை.''

''உங்க தேடாதே தொலைந்து போவாய் சூப்பர் சார்.''

''சந்தோஷம். தேங்க்யூ.''

''உங்க சொந்த ஊர் திருச்சிதானே?''

''ஆமாம்.''

''நீங்க நம்ம ஊரை மையமா வெச்சு ஒரு படம் எடுக்கணும். குறிப்பா இந்த ஸ்ரீரங்கமும் உங்க படத்துல வரணும்.''

''பாப்போம்.''

இருவரும் பேசப்பேச காரைச் சுற்றி மெல்ல கூட்டம் சேர ஆரம்பித்தது. உடனேயே சுகுமார் காரை ஸ்டார்ட் செய்தான். மொத்த கூட்டமும். ஆளாளுக்கு



விதரணையில்லாமல் கேள்வி கேட்குமுன் காரைக் கிளப்பினான்.

கார் அந்தப்புறமாக போயிருக்கும், இந்தப்புறமாக வத்சலா நுழைந்து கொண்டிருந்தாள் அந்த வீட்டுக்குள். ராஜகோபாலன் பார்த்துவிட்டு அவளை வாயார கூப்பிட்டார்.

''வா வத்சலா...''

''யாருண்ணா அது கார்ல?''

''அதை ஏன் கேக்கற... யாரோ சினிமா டைரக்டராம்.''

''சினிமா டைரக்டரா?''

''ஆமாம்... அது கிடக்கட்டும் விடு. எங்க மாப்ளை?'' - ராஜகோபாலன் பேச்சை மாற்றப் பார்த்தார்.

''ஆமா... அவா எதுக்கு வந்துட்டுப் போறா?''

''பொழப்பென்ன... நம்ம சித்ரா போட்டோவை அவ தங்கையோட போட்டோவோட சேர்ந்து பாத்துருக்கார் போல... அவர் எடுக்கற படத்துக்கு இவ ஹீரோயினா நடிக்கணுமாம். வேடிக்கையா இல்ல...?''

- ராஜகோபாலன் சாதாரணமாக சொல்லியபடி ஊஞ்சலில் போய் அமர்ந்தார்.

''அப்படியா?'' - வத்சலாவும் சாதாரணமாக அதைக் கேட்டுக் கொண்டாள்.

பூமாவும் சித்ராவும் கூடத்தில் நின்றபடி வத்சலாவையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

''ஆமா... என்ன இது திடுதிடுப்புன்னு வந்துருக்கே... எதாவது முக்கிய விஷயமா?'' - ராஜகோபாலன் தொடரவும்,

வத்சலாவிடம் அமைதி அடர்த்தியாகத் தொடங்கியது.

''என்ன வத்சலா... என் ஒரு மாதிரி இருக்கே?'' - பூமாவும் தன் பங்குக்குக் கேட்க, வத்சலா நைச்சியமாக சித்ராவை நெருங்கி அவள் தலையை வருடித்தர ஆரம்பித்தாள். முகத்தில் வாட்டம் படு துல்லியமாகத் தெரிந்தது. ஏதோ பிரச்சினை என்பது அவர்களுக்குப் புரிந்து போயிற்று.

''அத்தே...'' - சித்ரா, வத்சலாவைக் கூப்பிட, ஏறிட்ட அவள் முகத்தில் இப்போது கண்ணீர் வரிகள்.

''என்னாச்சு அத்தை...?'' - சித்ரா பதிலுக்குப் பதறினாள்.

''ஒண்ணுமில்லடா... குழந்தே - உனக்கு என் மாட்டுப் பொண்ணா வர இஷ்டம் தானே?''

''என்னத்தே கேள்வி இது...?''

''ஒண்ணுமில்லடா. எந்த அளவுக்கு இஷ்டம்னு தெரிஞ்சுக்கத்தான் அப்படி கேட்டேன்.''

''இதென்ன கேள்வி வத்சலா... ஏன் திடீர்னு உனக்கு சந்தேகம்?''

''அது வந்து... அது வந்து...''

''என்ன வத்சலா... என்ன நடந்தது? யாராவது எதாவது சொன்னாளாக்கும்?''

''சொல்றேன்... உன் மாப்பிள்ளைக்கு அதாவது என் ஆத்துக்காரருக்கு திடீர்னு புத்தி மாறிடுத்து. இன்னிக்கு ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுட்டார்.''

''என்ன சொன்னார்?'' - ராஜகோபாலன் ஊஞ்சலில் இருந்து எழுந்த விதத்தில் ஊஞ்சலே நடுங்கியது.

''எப்பவும் அவருக்குள்ள இருக்கற அந்த



அந்தஸ்த்துக் காய்ச்சல்தான். அதை சீனு விஷயத்துலையும் காட்டினார். ஆடிட்டர் நரசிம்மன் பொண்ணைத்தான் அவன் கல்யாணம் பண்ணிக்கணுமாம். அதான் அவனுக்கழகாம்.''

- வத்சலா வார்த்தைகளை மென்று துப்பினாள்.

''நீ என்ன சொன்னே?''

''நான் என்னத்த சொல்ல... ஆனா சீனு முடியாதுன்னுட்டான்.''

''ஓஹோ...'' - ராஜகோபாலன் ஒரு நினுசாகக் கேட்டபடி பூமாவைப் பார்க்க, அவள் பார்வை சித்ரா பக்கம் திரும்பியது. சித்ரா முகத்தில் ஒரு சிறிய பூகம்பத்தின் ஆரம்பம்.

''என்னைக் கல்யாணம் பண்ணிண்டதுலேயே அவருக்கு ஏகத்துக்கும் வருத்தம். ஒட்டியும் ஒட்டாமதானே குடும்ப வாழ்க்கையே நடந்தது. இப்போ அது வேறு விதத்துல எதிரொலிக்கறது...''

''போகட்டும்... மாப்ள சீனு உறுதியா இருக்காரா?''

''இப்ப எல்லாமே அவன் கைலதான் இருக்கு. அவன் உறுதியிலதான் இருக்கு.''

''இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் மனசார விரும்பறது அவருக்கு தெரியும் தானே?''

''தெரியாமலா...? 'நாலு வருஷம் கழிச்சு வந்துருக்கான். என்ன பெரிய விருப்பம் இதுல இருந்துட முடியும். அவன் வெளிநாட்டுல இருந்தே வரலைன்னு நினைச்சுண்டு மனசை மாத்திக்க சொல்லு'ன்னு சாதாரணமா சொல்றார்.''

''அப்ப அப்பா புள்ளைக்கு நடுவுல

வந்ததும் வராததுமா ஒரு யுத்தம் உருவாகியாச்சுன்னு சொல்லு.''

''ஆமாம். அதுல அவரை அவன் எப்படியும் அடக்கிடுவான். சித்ரா கழுத்துலதான் தாலியைக் கட்டுவான். என்ன கொஞ்சம் தாமதமாகலாம். நீங்க அதை எல்லாம் கண்டுக்கக் கூடாது. உறுதியா இருக்கணும். அதைச் சொல்லத்தான் வந்தேன்.''

- வத்சலா சொன்னபடியே எழுந்து நின்றாள். கிளம்பும் உத்தேசம் பளிச்சென்று தெரிந்தது. அப்படியே பார்வை சித்ராவை பார்த்தது.

அவள் கண்களில் சேதி சொன்னதன் எதிரொலிகள்.

''அழாதடா கொழந்த... அதான் உன் அத்தான் உறுதியா இருக்கானே. எதுக்குக் கவலைப்பட்றே?''

- கேள்வியோடு அவளை நெருங்கி கண்ணீரைச் சுண்டி விட்டாள்.

''சரி நான் புறப்பட்றேன். நான் இல்லேன்ன உடனே இங்கதான் வந்துருப்பேன்னு தீர்மானிச்சிருப்பார். கிளம்பறேன். நீங்க ஒண்ணுத்தையும் காட்டிக்காம எப்பவும் போல வந்துட்டு போங்கோ... வரேன்.'' - சொல்லிவிட்டு புறப்பட்டாள்.

ராஜகோபாலனும் பூமாவும் சோர்ந்து போய் சித்ரா பக்கம் திரும்ப, அவள் அசோகவனத்து சீதை மாதிரி கீழே அமர்ந்து அழ ஆரம்பித்தாள்.

வெளியே போன வத்சலா திடீரென்று திரும்பி வந்தாள்.

''அண்ணா... அந்த சினிமாக்காரரா யாரோ வந்தா... நடிக்கக் கூப்டான்னுல்லாம் சொன்னியே...''



''...''

''பாத்து... அது விஷயமா எதுனா அவர் காதுல விழுந்தா அதையே ஆயுதமா பயன்படுத்தி கல்யாணம் வேண்டாம்னு சொல்வார். ஜாக்கிரதை...''

- சோர்வாகத் தலையை அசைத்து அதைக் கேட்டுக் கொண்டார் ராஜகோபாலன்.

---

# 5

---

ஆடிட்டர் நரசிம்மன் வீடு அந்தக் கோடிக்கும் இந்தக் கோடிக்குமாக நீண்டு கிடந்தது. அந்தக் காலத்து வீடாக இருந்தாலும் இந்தக் காலத்து நவீனங்களையும் பிடித்துப் போட்டிருந்தார் நரசிம்மன்.

தரையில் மார்பிள், அறைகளில் ஏ.சி., ஹாலில் சோபாக்கள் என்று நல்ல ஜெகஜ்ஜாலம் காட்டிற்று.

நரசிம்மனும் பார்க்க ஜனாதிபதியாட்டம் இருப்பார். முகத்தில் ராஜ களை. சொத்து பத்திலும் ராஜாதான். தென்னந்தோப்பும் மாந்தோப்புமே பல லட்சம் போகும். ஒரே பெண். எல்லாம் அவளுக்கும் அவளுக்கு வரப்போகிறவனுக்கும்தான்.

ஆடிட்டராக இருப்பதால் முன்னணி நிறுவனங்களின் தொடர்பு வேறு...

எல்லாவற்றையும் உத்தேசித்துதான் சடகோபன் நரசிம்மனை சம்பந்தியாக்கிக் கொள்ள விரும்பினார். நரசிம்மனுக்கும் ஒரே பெண் என்பதால் கைக்கு அடக்கமான மாப்பிள்ளை தேவை.

அவன் ஸ்டேட்டஸில் இருந்து எல்லாவிதத்திலும் இளைப்பாக இருந்தால்தான் வீட்டோடு வைத்துக் கொள்ள முடியும் என்பது அவர் உத்தேசம்.

அதனால்தான் ஜாடிக்கு மூடி சரியாகப் பொருந்திப் போய் விட்டது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டால் வழியும் வழிசலிலும் அது எதிரொலிக்கிறது.

''வாரும் சடகோபன் வாரும்... வாரும்...'' - எழுந்து வந்துதான் வரவேற்புத் தருகிறார் நரசிம்மன். இத்தனைக்கும் பஜாஜ் ஸ்கூட்டரில்தான் வந்திறங்கியிருக்கிறார் சடகோபன். வாசலில் நரசிம்மன் கார் அருகே அதை நிறுத்தவே என்னவோ போல் இருக்கிறது.

''ஆமாம்... மாப்ளை வந்துட்டாரா?''

- சோபாவைக் காட்டியபடி இதமான குரலில் அவர் விசாரிக்கும் அழகே அழகுதான்.

''வந்துட்டான். வந்துட்டான்...''

''கூட்டிண்டு வந்திருக்கலாமே?''

''ஜெட்லாக்ல இருந்து இன்னும் விடுபடலை அவன். அதான்...''

''ஐ.சீ... பாத்து நன்னா ரெஸ்ட் எடுத்துக்கச் சொல்லுங்கோ...''

நடுவில் நரசிம்மனின் மனைவி நாமகிரி நல்ல பட்டுப் புடவையில் இழுத்து போர்த்திக் கொண்டு பவ்யமாக எதிரில் வந்து ''சௌக்யம்தானே?'' என்று கேட்க, சடகோபனுக்கு வத்சலா ஞாபகம் உடனே வந்தது. அவள் எத்தனைதான் காஸ்ட்லி புடவை கட்டிக் கொண்டாலும் இந்த லட்சணமும் சாந்தமும் வரவே வராது



என்பது ஒரு சின்ன ஆதங்கமாக அந்த ஞாபகத்தில் பரவியது.

''ஆமா... எங்க என் மருமகப் பொண்ணு?''

''ஆபீஸ் போயிருக்கா. எனக்கு கொஞ்சம் அலுப்பா இருந்தது. அதான் 'நான் பாத்துக்கறேம்பா'ன்னுட்டு அவ போயிருக்கா. ஆங்... நாமகிரி ... அவ எந்தக் காரை எடுத்துண்டு போயிருக்கா... 5252யா?''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

''அய்யோ அதுல ஏ.சி. சரியா ஒர்க் பண்ணலயே - அதை எதுக்கு எடுத்துண்டு போனா - பேசாம இந்த கிரீன் கலர் சியாராவை எடுத்துண்டு போயிருக்கலாமே...''

''சொன்னா கேக்கறாளா... அவளுக்கு சிம்பிளா இருக்கத்தான் பிடிக்கிறது. சாதாரண சுங்கடிப் புடவையைத்தான் உடுத்திண்டு போயிருக்கான்னா பாத்துக்கோங்களேன்...''

- ஆடிட்டரும், அவர் மனைவியும் பேசிக் கொள்வதில் பவிசும் லட்சணமும் கும்மி கொட்டிற்று. சடகோபன் 'ஆஹா என்ன ஒரு குடும்பம்' என்று மனதார நினைத்துக் கொண்டார்.

இந்த சமயம் பார்த்துத்தானா இவர் மச்சினன் சமையக்கார ராஜகோபாலன் அந்த வீட்டுக்குள் நுழைய வேண்டும்?

''வாங்கோ...''

''அண்ணா இருக்காரா?''

''இருக்கார். உங்க தங்கை ஆத்துக்காரரும் வந்துருக்கார்.''

''அப்படியா... அப்ப நான் அப்புறமா

வரேனே?''

''அதனால என்ன... நீங்க வந்த காரியத்தைப் பாருங்கோ.'' - மாமி நாமகிரி அவரைப் பார்த்துவிட்டு சுட்ட கத்தரிக்காய் போல முகத்தை மாற்றிக் கொள்ள - அதை ரசித்தபடியே நரசிம்மன் ராஜகோபாலனைப் பார்த்தார்.

''வாய்யா வா... காரணமாத்தான் வரச்சொன்னேன்.''

''என்னண்ணா... எதானா விசேஷமா? - அடியேன் நளபாகத்தை கவனிச்சுக்கணுமாக்கும்?''

''அதுவேதான். கூடிய சீக்கிரம் என் பொண்ணுக்கு நிச்சயம் பண்ணலாம்னு இருக்கேன். மாப்ளை யார் தெரியுமோ?''

- நரசிம்மன் ஒரு தினுசாகக் கேட்டபடி சடகோபனை ஒரு பார்வையும், ராஜகோபாலனை ஒரு பார்வையும் பார்க்க, ராஜகோபாலன் முகத்தில் சற்றுக் கலவரம்.

''எல்லாம் உம்ம தங்கை புள்ளதான். அதான் முந்தியே சொல்லி வைப்போம்னு வரச் சொன்னேன்.''

''ரொம்ப சந்தோஷம். ஒரு பக்கம் நீங்கோ... மறுபக்கம் என் மருமான். ஜமாய்ச்சுடறேன்.'' - சொல்லும் போதே கொஞ்சம் குரல் உடையத்தான் செய்தது.

''அட்வான்ஸ் தராம பேசினா எப்படி... நாமகிரி... அந்த செக் புக்க எடு. வேண்டாம் வேண்டாம். இவருக்கு அக்கவுண்ட் இருக்கோ இல்லியோ? கேஷாவே தந்துடுவோம். பீரோல இருந்து ஒரு அஞ்சாயிரத்தை எடுத்துண்டு வா... இது அப்படியே கல்யாணத்துக்கும் சேர்த்து...''

- நரசிம்மனின் கித்தாப்பு கொடி



கட்டிற்று. நாமகிரியும் பணத்தை எடுத்து வந்தாள். ராஜகோபாலன் நெளிந்தார்.

''பரவால்லண்ணா... என் மருமான் கல்யாணத்துக்கு நான் காசு வாங்கலாமா? அது என் கடமை. பணத்தை உள்ற வைங்கோ.'' என்று ராஜகோபாலன் சொன்னாலும், நரசிம்மன் விடவில்லை. கட்டாயப்படுத்தி ராஜகோபாலனின் கைகளில் ஐயாயிரம் ரூபாயைத் திணித்தார் நரசிம்மன்.

ஒருவித சங்கடத்துடன் அதைப் பெற்றுக் கொண்டு மனதுக்குள் எழுந்த சஞ்சலத்தையும் கொதிப்பையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், நரசிம்மன் - நாமகிரி இருவரிடமும் சொல்லிக் கொண்டு ராஜகோபாலன் கிளம்பும் போது அப்படியே சடகோபனிடமும் சொல்லிக் கொண்டு புறப்பட்டவரை சிரித்தபடியே பார்த்தார் நரசிம்மன்.

ராஜகோபாலன் வெளியேறி விட்டது தெரிந்து சடகோபன் பக்கம் திரும்பினார்.

''ஆமா... எப்போ பொண் பாக்கற படலம்?''

''அதெல்லாம் எதுக்கு ஸ்வாமி. சீனுக்குதான் ரேவதிய நன்னா தெரியுமே...?''

''இருந்தாலும் சம்பிரதாயம்னு ஒண்ணு இருக்கோல்லியோ?''

''புடலங்கா சம்பிரதாயம். எல்லாம் நாம நம்ம வசதிக்கு வெச்சுக்கறதுதானே? முன்னயெல்லாம் மூணு நாளைக்கு ஊருக்கே சோத்த போட்டு நாதஸ்வரக் கச்சேரி, பாட்டுக் கச்சேரின்னு அமர்க்களப்படுத்தினா... இப்ப அப்படி

பண்ணினா கட்டுப்படி ஆகுமா?''

''எனக்கு ஆகும் ஓய்... ஒரே பொண்ணு. இவளுக்குப் பண்ணாம யாருக்கு பண்ணப் போறேன்? பணத்த சேர்த்து வெச்சு என்னத்த பண்ணப் போறோம்...?''

''அதுக்கில்லை. ஒரு விதத்துல இதை ஊதாரித்தனம்னு எல்லாரும் ஃபீல் பண்ண ஆரம்பிச்சுட்டா. ஏவன் பட்டுப்புடவை உடுத்திண்டு கல்யாணம் பண்றது கூட பாவம்கற மாதிரி ஒரு தாட் வந்துடுத்தே...''

''ஜீவகாருண்ய சிந்தனையோ...?''

''இல்ல ஒரு பேச்சுக்கு சொன்னேன். அதானே அதுக்கு அர்த்தம்.''

''அதெல்லாம் துளிகூட யாருக்கும் கிடையாது. அப்படி ஒரு சிந்தனை யாருக்கும் இருக்கறதாவே தெரியல. பட்டுப்படவைங்கறது அந்தஸ்த்தோட சின்னமான்னா இன்னிக்கு இருக்கு?''

''வாஸ்தவம்தான்...''

''என் வரைல கல்யாண செலவை நான் ஊதாரித்தனமா நினைக்கல. அது ஒரு சோஷியல் கான்ட்ரிபியூஷன். எப்படின்னு கேளுங்கோ...?''

நரசிம்மன் வெள்ளி வெற்றிலைப் பெட்டியைத் திறந்தபடி ஒரு பிரசங்கத்திற்கு ஆரம்பமாவது தெரிந்தது. சட்கோபனும் முகபாவங்களிலே அதைக் கேட்பதற்கு தயாரானார்.

''நாதஸ்வரக்காரா... சமையக்காரா... பந்தல்காரா அப்புறமா கல்யாண மண்டபக்காரன், மைக் செட்டு, ட்யூப் லைட்டுன்னு போடறவன், அப்புறமா ஜானவாசக் கார்க்காரன், உபாத்யாயம் பண்றவர்னு ஒரு கூட்டத்துக்கே நாம ஜாப்



கொடுக்கறோம். அதுல தாராளமா நாம நடந்துக்கும் போது அவாளுக்கெல்லாமும் ரொம்ப சந்தோஷம். எல்லாத்துக்கும் மேலே ஊரையே கூப்ட்டு சாப்பாடு போட்றோம். எவ்வளவு இருக்கு.''

சடகோபன் சிரித்து வழிந்து ஆமோதிப்பைத் தந்தார்.

''உங்களுக்கு ஆனாலும் நோபுள் தாட்... இதுக்கெல்லாம் பெரிய மனசு வேணும்'' என்று ஒரு சன்னமான சப்தத்தோடு கூடிய ஜால்ராவை இசைக்க - நரசிம்மனுக்கு வாயெல்லாம் பல்.

''அப்ப பொண்ணு பாக்கற சம்பிரதாயம் வேண்டாம். டைரக்டா நிச்சயதார்த்தத் துக்கே போயிடலாம்கறேளா?''

''ஆமாம்...''

''சரி எப்ப வெச்சுக்கலாம்னு நீரே சொல்லுமே...''

''அது... அது...''

''என்ன... ஆத்துல ஆம்படையாகிட்டே யும் ஒரு வார்த்தை கேட்டுக்கணுமோ?''

''அ... ஆமாம்... ஆமாம்...''

''இதுக்கெதுக்கு இவ்வளவு இழுத்துண்டு. பேஷா கேட்டுட்டு சொல் லும். அப்புறம் இன்னொரு விஷயம்...''

''என்ன?''

''ஜாதகம் ஜாதகம்னு நம்ம கூட்டத்துக்கே ஒரு பைத்தியம் உண்டு. நீங்க அதை நம்பறேளா?''

''நம்பறேளான்னா... எனக்குப் புரியல...''

''அட என்னங்காணும்... இந்த கல்யாணத்துக்கு ஜாதகப் பொருத்தம் பார்க்கணுமான்னேன்.''

''அதான் அன்னிக்கே சொன்னேனே... அதெல்லாம் ஒரு ஃபார்மாலிடின்னு...''

''சுத்த ஹம்பக்கான ஃபார்மாலிட்டின்னு, அதை நான் நினைக்கிறேன். அதோட ஜாதகம் பாத்துத் துல்லியமா பலன் சொல்றவாளும் இப்ப யாரும் கிடையாது. ஆகையால அதை ரைட் ஆஃப் பண்றதுதான் நல்லதுன்னு எனக்குப் பட்றது. நீரும் என்னை மாதிரியே ரைட் லாயலா திங்க் பண்றவர் - என்ன சொல்றேள்?''

- நரசிம்மன் சாதுர்யமாகப் பேசி நிர்ப்பந்தித்தார். சடகோபன் அப்படியும் இப்படியுமாக விழியை உருட்டி விட்டு மிடறுகட்டியபடியே ''ரைட்... நீர் சொல்றது தான் சரி... கொஞ்சம் காலத்துக்கு தகுந்த மாதிரி மாடர்னாவும் நடந்துப்போமே?'' என்று சொல்லவும் நரசிம்மனுக்குள் தான் நினைத்ததை சாதித்து விட்ட பெருமிதம்.

ஆனால் அவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்த நாமகிரிக்கு மட்டும் என்னவோ போல் ஆனது.

சடகோபன் சாங்கோபாங்கமாக சொல்லிக் கொண்டு விடைபெற்றுப் போன பிறகு நெருங்கி வந்து கேட்டாள்.

''என்ன இது... ஜாதக விஷயத்துல அவரை இப்படி கட்டிப் போட்டுட்டேளே. நம்ம ரேவதி ஜாதகம் பத்தி தெரியும்தானே?''

நரசிம்மன் அடுத்த கணமே நாமகிரியைப் பார்த்த பார்வையில் பூச்சி பறந்தது.

''இதோ பாருடி... எனக்கு என் பொண்ணு ஜாதகம் மட்டுமில்ல... அந்தப் பயனோட ஜாதகமும் என்னன்னு தெரியும்.



நான் எங்க யார்கிட்ட காட்டணுமோ காட்டி என்ன தெரிஞ்சுக்கணுமோ அதைத் தெரிஞ்சுண்டுட்டேன்.''

- அடுத்த க்ஷணம் நாமகிரி முகத்தில் அதிர்ச்சி ஊடுருவியது.

''பாத்துட்டேளா... ஜாதகம் எப்படி கிடைச்சது?''

''ஆமாம் அதான் பெரிய விஷயமாக்கும். வாட்டர் கேட் ஊழல்ல நிக்ஸன் பேசின டெலிபோன் பேச்சே கேசட்டா கடைல கிடைக்கற காலம்டி இது...''

''சரி... ஜோசியர் என்ன சொன்னார்?''

''என்னத்த் சொல்வார். உம்ம பொண்ணுக்கு கல்யாணத்த பண்ணாதீர். அது ஆபத்துன்னார். அதே பழைய பல்லவிதான்.''

''அப்படி சொல்லியுமா கல்யாணத்துக்கு ஆசைப்படணும்?''

''அதுசரி... அப்படியே வெச்சுண்டுருக்க அவ என்ன தங்கமா வைரமா... உசுருள்ள ஜீவன்டி அவ. அவளுக்கும் உணர்ச்சிகள் உண்டு.''

''அதுக்காக ஜாதக விரோதமா நடந்துண்டா முதலுக்கே மோசம் வராதா?''

''அங்கதான் நீ தப்புக் கணக்கு போட்றே. என் கணக்கே வேற...''

''என்ன உங்க கணக்கு?''

''என் பொண்ணு ஜாதகம் புருஷனை அடிக்கற ஜாதகம்னுதானே ஜோசியர் சொன்னார். அது பொய்யின்னு ஆயிடுத்துன்னா...''

''எப்படி?''

''போகப் போகப் பாரு. ஆனா ஜாதக சம்பந்தமா வாயைத் திறக்கக் கூடாது. நீ

ஜாக்கிரதை.''

- நரசிம்மன் அதீத முகபாவங்களுடன் எச்சரிக்கை செய்ய, நாமகிரி கலக்கத்துடன் தலையை ஆமோதித்து அசைத்தாள்.

## 6

சுப்புவோடு கொள்ளிடக் கரைக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான் சீனு.

நல்ல மாலை நேரம்.

சித்ராவும் அங்கு வரப் போவதாகத் தகவல்.

எல்லாம் முன்னேற்பாடுதான்!

ஒரு மூட்டை அழுக்குத் துணியோடு கொள்ளிடக் கரைக்குப் போனால் ஓரமாக தென்னந்தோப்பு.

அங்கே ஒதுங்கி நிறைய பேசலாம். அவசியப்பட்டால் சில்மிஷங்களையும் செய்யலாம்.

சீனுவுக்கு பரபரவென்று இருந்தது.

இடுப்பில் வேட்டி - ஒரு டி ஷர்ட், ஒரு துண்டு என்று புறப்பட்டாயிற்று.

''ஆமா... குவைத்துல தண்ணிப் பிரச்சினை உண்டாடா?'' - நடக்கும் போது சுப்புவிடம் படுவழக்கமான கேள்வி.

''பிரச்சினைன்னு கிடையாது. அதுக்காக இப்படி காவேரி மாதிரி ரிவர்லாமும் கிடையாது. அந்த விஷயத்துல நம்ம ஊர் மாதிரி வருமான்னா?''

''அது உண்மைதான். போனவாரம் என் மாமானவை பாக்க மெட்ராஸ் போயிருந்தேன். கொடுமையான தண்ணிப்



பிரச்சினை. ஒரு பக்கெட்னா ஒரு பக்கெட் தண்ணிதான் தந்தா மாமி. ஏதோ காக்கா குளியல் குளிச்சேன்.''

- சுப்பு சொல்லும் போதே சீனு பார்வை நாலா புறமும் துழாவியது.

''யாரைத் தேட்றே? உன் ஆளையா?''

''ஆமாம்... கட்டாயம் வருவேன்னு சொல்லியிருந்தா...''

''வராம எங்க போயிடுவா. இல்ல நீதான் விடுவியா...''

- கேள்வி கேட்டு பதில் சொல்லி முடிப்பதற்குள் கொள்ளிட இறக்கம் வந்து விட்டது. முகப்பில் கோவில் வாசலில் நின்று கொண்டிருந்தாள் சித்ரா.

''அதோடா என் ஆளு...''

''ஓடு... ஓடு. ஆத்துல நான் அக்கரைல எதாவது ஒரு இடத்துல துணி தோய்ச்சுண்டு இருப்பேன். சீக்ரமா வந்து சேர்...'' - சுப்பு இங்கிதமாய் ஒதுங்க - சீனு சித்ராவை நோக்கி நடந்தான். கோவில் முகப்பில் தரையைப் பார்த்துக் கொண்டு நின்றபடி இருந்தாள் அவள்.

''சித்...''

''உம்...''

''என்ன இது பாகவதர் காலத்து படம் மாதிரி தரையை பார்த்துண்டு வெட்கத்தோடு நிக்கறே?''

அவள் வெடுக்கென்று நிமிர்ந்தாள்.

கண்களில் குளம் வெட்டின மாதிரி கண்ணீர்.

அவனுக்கும் உடனேயே புரிந்து போனது.

''என்ன சித்ரா... எனக்கு எங்கப்பா வேற இடத்துல பொண் பாக்கறத நினைச்சு

அழுறியாக்கும்?''

''.....''

''அவர் ஆயிரம் இடத்துல பாக்கட்டும். நான் தாலி கட்டப் போறது உன் கழுத்துல மட்டும்தான்.''

''நீங்க உறுதியா இருக்கேளா அதுல...?''

''பைத்தியம்... அவர்தான் அடிக்கடி இப்படி எதாவது இடக்கு பண்ணிண்டு இருப்பாரே. இது தெரிஞ்ச விஷயம் தானே?''

''அது வேற விஷயத்திலேன்னா பரவால்ல... இது நம்ம வாழ்க்கை சம்பந்தப்பட்டதாச்சே. அதோட உங்கப்பா ஒரு முடிவு எடுத்தா எடுத்ததுதானே...?''

''எது சம்பந்தப்பட்டதா இருந்தா என்ன... நான் திடமா இல்லேன்னாதான் நீ கவலைப்படணும். இதோ பார் இன்னொரு தடவை இப்படி கலங்கி நிக்கற வேலையெல்லாம் வேண்டாம். அப்பாவை சமாளிக்க எனக்குத் தெரியும். இதுல நான் ஒட்டு மொத்தமா பாடம் கத்துத் தர விரும்பறேன்... எங்களை எல்லாம் எவ்வளவு பாடு படுத்தியிருப்பார்... வெச்சுக்கறேன். ஆமா... ஆத்தங்கரைக்கு வந்துருக்கறது இப்படி அழறதுக்குத்தானா?''

- அவள் நிமிர்ந்தாள் - கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டாள். லேசாக சிரிக்க ஆரம்பித்தாள். பின் இருவருமாக ஆற்றுப்பக்கம் நடக்க ஆரம்பித்தார்கள்.

''ஆமா... இப்ப எங்க போறோம்?''

''குளிக்கத்தான்...''

''அது எனக்கும் தெரியும். கொஞ்சம் தோப்புக்குள்ற வா...''



''எதுக்கு...''

''எதுக்கா... மகாபாரதக் கதை கேட்டா
லதாம். சொல்றேன்.''

''கதை சொல்லப் போற முகரையைப்
ரு...''

அவன் சிணுங்கினாள். அவன்
வளைத் திசை திருப்பி பக்கவாட்டு
ங்கில்வேலித் தட்டியை விலக்கிக்
ாண்டு தோப்புக்குள் நுழைந்தான்.
வளும் சுற்றிச் சுற்றிப் பார்த்துக் கொண்டு
ன் தொடர ஆரம்பித்தாள்.

ஒருவர் மட்டும் வைத்த விழி வாங்காமல்
ர்த்துக் கொண்டிருந்தார். அவர்
கோபன்!

ாரம் பிழிந்த வேட்டி தோளின் மேல்
ருந்தது.

---

## 7

---

வீட்டுக்குள் வத்சலாவும் பாட்டியும்
ாம் பிழிந்து கொண்டிருந்தார்கள்.

உள்ளே நுழையும் சடகோபனை நிமிர்ந்து
ர்த்தார்கள். அவர்கள் எதிரில் ஈர
ட்டியை கூடத்து கொடிக்குச்சியில்
வர் உலர்த்த ஆரம்பித்தார்.

''என்ன இது சாயங்காலத்துல காவேரிக்கு
ாயிருக்கேள்?'' - வத்சலா பேச்சை
ரம்பித்தாள்.

''அப்படிப் போனாத்தானே உன் புள்ளை
மருமாளும் லூட்டி அடிக்கறத
க்கலாம்.''

அம்பு மாதிரி வந்து விழுந்தது

வார்த்தைகள்.

பதில் பேச முடியவில்லை. சிறு வயத்
இப்படித்தான் படிக்கப்போகிறேன் என்
காவேரிக்கு போன சீனுவைப் பார்த்
விட்டு ஆடு போட்டது, சட்டெ
வத்சலாவுக்கு ஞாபகம் வந்தது.

''சின்னஞ்சிறுசுகள் சந்தோஷ
இருந்தா அதுல என்னடா தப்பு?'' - பாட்
பயந்து கொண்டே வக்காலத்து வாங்
தொடங்கினாள். சடகோப
செங்கண்களோடு ஒரு முறை முறைத்த

''உங்களுக்கென்ன பைத்திய
பிடிச்சிருக்கு? நான் அவனை ஆடிட்
மாப்பிள்ளையாக்கணும்னு ஆ
படறேன். நீங்க சமையக்கா
மாப்பிள்ளையாக்க நினைக்கறேள்.''

''அடபோடா... நீ ஒரு அந்தஸ்
காய்ச்சல் பிடிச்சவன்கறதுதான் தெரி
சமாச்சாரமாச்சே. சமையக்காரன், ஆ
டர்னு... உன் பிள்ளை அப்படி எல்ல
நினைக்கறதா எனக்குத் தெரியல. அ
அவளைத்தான் விரும்பறான். அவ
மீறிண்டு நீ எதையாவது பண்
இதுலையும் உன் நாட்டாமை
காட்டிடாதேடா...'' - பாட்டி தைரி
காட்டிக் கேட்டாள்.

''அப்படி மட்டும் அவன் நடந்துண்
அடுத்த க்ஷணம் தூக்
தொங்கிடுவேன்...''

பூஷுவல் டயலாக்தான். ஆனால் சிவ
மாதிரி மிகுந்த உணர்ச்சியோடு பேசி
சடகோபன். அவர்கள் வாயடைத்
போனார்கள்.

ஒருவிதமான அமைதி நிலவும் அ



இறுக்கத்தின் போது சீனுவும் உள் நுழைய...

''என்ன இது... எல்லாரும் ஏன் இப்படி
என்னையே பாக்கறேள்?''

''எல்லாம் உன் கல்யாண
விஷயமாத்தான்.''

''அதுல என்ன குழப்பம்? சித்ராதான் என்
பொண்டாட்டி. நான் எப்பவோ டிசைட்
பண்ணியாச்சு. கல்யாணத்துக்கு ஏற்பாடு
பண்ணுங்கோ. தாலியக்கட்டறேன்!''

''உங்கப்பனுக்கு அதுல இஷ்டமில்லை.
மட்டும் அவ கழுத்துல தாலியக் கட்டினா
உங்கப்பன் தூக்குல தொங்கி
டுவானாம்.''

''இதெல்லாம் சினிமா டயலாக். ஆ
என்னா இப்படி ஒரு பிளாக்
மெயிலாக்கும்? ஏன்... ஓட்ற ரயில்ல போய்
விழுந்துடுவேன், பாம்பு புத்துக்குள்ற
கையை விடுவேன்னுல்லாம் கொஞ்சம்
மாறுதலா சொல்ல வேண்டியது தானே?''

''என்னமோப்பா... நாலு வருஷம் கழிச்சு
வந்துருக்கே. இனி சந்தோஷமா
இருக்கலாம்னு பார்த்தா எல்லாமே தலை
கீழா இருக்கு. இது எதுல போய் முடியுமோ
தெரியல...'' - பாட்டி ஆதங்கித்தாள்.

''எதுலையும் போய் முடியாது. நான் என்
ஆசைப்படி சித்ரா கழுத்துல தாலி
கட்டுவேன். இவர் சும்மா பூச்சாண்டி
காட்டிட்டு அப்றமா ஆசீர்வாதம்
பண்ணிடுவார். நீங்க போய் வேலையப்
பாருங்கோ. இவருக்கு நீங்கள்லாம் பயந்தது
போதும். நான் பயப்பட மாட்டேன். இது
2000மாவது வருஷம். அதைக் கொஞ்சம்
மனசுல வெச்சுண்டு பேசுங்கோ.''

அவன் துளிகூட சலன

சஞ்சலமில்லாமல் பேசிய
சடகோபனைப் பிழிந்தெடுத்த
பிள்ளையை முறைத்துப் பார்த்தார்.
''அட போங்கோப்பா... இருந்த
வழியப்பாருங்கோ...'' என்றான். நெற்றி
பொட்டின் நடுவில் ஊசியை செருகின
போல் அவருக்கு வலித்தது. அடுத்த கண
ஆவேசம் வந்தது போல அங்கும் இங்கும
திரும்பிப் பார்த்தவர் கண்களில் நேரா
தோட்டத்தில் தெரியும் கிணறும் அத
ராட்டினக் கயிறும் பட்டது.
போனார்.
மளமளவென்று அதை உருவி எடுத்து
கொண்டார். வத்சலாவும் பாட்டியு
மலங்க மலங்கப் பார்க்க - சீனு துளிகூ
லட்சியம் செய்யாதபடி பக்கத்தில் கிடந்
ஹிந்துவை எடுத்து விரித்துக் கொண்
படிக்கத் தொடங்கினான்.
அவர் மளமளவென்று ரேழியை ஒட்டி
பூஜை அறைக்குள் நுழைந்து கொண்
கதவை தாழிட்டுக் கொண்டார்.
உத்தரம் உள்ளேயும் இருந்தது.
அதன்மேல் கயிறு விழுந்து முடிச்சையு
போட்டுக் கொண்டது.
ஜன்னல் திறந்திருந்திருந்தது. உள்ளே
நடப்பதையும் பார்க்க முடிந்தது. பதறினா
வத்சலா. பாட்டி போய் கதவை உடைக்க
தொடங்கினாள். வேறு வழியின்றி சீனுவு
நடப்பதைப் பார்த்துவிட்டு வேடிக்கை
பார்க்க முடியாதபடி எழுந்து சென்
கதவை உடைக்கத் தொடங்கினான்.
நல்லவேளை! சடகோபன் உ
போய்விடவில்லை. கயிற்றிலிருந்
அவரை விடுவித்து கீழே கிடத்தி மூர்ச்ச



தெளிவிக்க முயற்சி செய்து... அந்த இக்கட்டான வேளையிலும் அவர் முகத்தில் ரகசியமாக ஒரு வெற்றிப் புன்னகை பரவத் தொடங்கியது. அதை யார் கவனித்தார்களோ, இல்லையோ - பாட்டி கவனித்தாள்!

---

## 8

---

நிச்சயதார்த்த அழைப்புக்காக பூ பழத் தட்டோடு வத்சலா, அண்ணா ராஜகோபாலனைப் பார்க்க வந்த போது ஊஞ்சலின் மேல் ஒருக்களித்துப் படுத்தபடி அழுது கொண்டிருந்தாள் சித்ரா.

அத்தை வரவும் மெல்ல எழுந்திருந்தாள். பல நாட்களாக அழுததில் முகத்தில் நிறைய வீக்கம். தலை வாரிக் கொள்ளக்கூட பிடிக்கவில்லை. பார்க்க சற்று பிச்சைக்காரி மாதிரிதான் இருந்தாள்.

வத்சலாவுக்கு புரியாதா என்ன?

இருந்தாலும் என்ன செய்யமுடியும்?

வந்தவள் எதுவும் பேசவில்லை. மளமளவென்று பையிலிருந்து வெள்ளித்தட்டை வெளியே எடுத்தாள். அப்படியே பூ பழத்தையும் வைத்து நிமிர்ந்தபோது ராஜகோபாலனும் பூமாவும் எதிரே நின்று கொண்டிருந்தார்கள்.

ராஜகோபாலன் முகம் கடுவன் பூனையாட்டம் இருந்தது.

''எங்க வந்தே?'' - எடுத்த எடுப்பில் இடி போல கேள்வி...

''அண்ணா...'' - வத்சலாவிடம் தாள

மாட்டாத விசும்பல்.

''போறும்... அதான் கரியைப் பூசிட்டேளே. அப்றம் என்ன...''

''நான் என்னண்ணா பண்ணுவேன்?''

''சரி - இப்ப சித்ரா என்ன பண்ணுவா? அதை யோசிச்சு பாத்தியா... அவ கழுத்துல இனிமே எவன் தாலியைக் கட்டுவான்...? இவா ஸ்நேகம்தான் ஊர் பூரா தெரியுமே...''

''அண்ணா! நான் ஏற்கனவே நொந்து போயிருக்கேன். இந்த சம்பவத்தால நம்ம உறவு அறுந்துட வேணாம்னுதான் முறையா கூப்பிட வந்துருக்கேன். அவர் பிடிவாதம்தான் உனக்குத் தெரியுமே...?''

''நீ என்ன சமாதானம் சொன்னாலும் என் நெஞ்சு ஆறாது வத்சலா. இப்படி ஒரு கழுத்தறுக்கற உறவு இன்னும் எதுக்கு? இத்தனைக்கும் பிறகு நான் என் குடும்பத்தோட வந்து அட்சதை போடவா...? பாக்கறவா சிரிக்கமாட்டா?''

- ராஜகோபாலனின் கொந்தளிப்பு, விட்டால் அவரையே ஹார்ட் அட்டாக்கில் சாய்த்து விடும் அளவு தென்பட்டது. முகமெல்லாம் வியர்வை... புஸ் புஸ் என்கிற பெருமூச்சு.

இங்கிதமாக பூமா சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தாள்.

''என்ன இது... வத்சலா என்ன பண்ணுவா? நாமதான் இதை ஜீரணிக்கணும்; இனிமே ஆதங்கப்பட்றதால ஆச்சா... நீ கொடும்மா நான் வாங்கிக்கறேன்.''

- அவள் பூ பழத்தை தட்டோடு வாங்கிக்



கொண்டாள். ராஜகோபாலன் உடனேயே அதை தட்டி விட்டார்.

''நீ போ உள்ற... வத்சலா! தயவு செய்து இதை திருப்பி எடுத்துண்டு போய்டு. இனி நீ இங்க ஒரு நிமிஷம் நிக்கக்கூடாது. நான் ஒரு சமையல்காரன். நான்லாம் கல்யாணத்துக்கு வந்தா உங்களுக்குத்தான் அவமானம். போ... போ...''

- ராஜகோபாலன் கத்துவது தெருவில் கூட கேட்டது. வத்சலாவால் எதுவும் பேச முடியவில்லை. கண்ணீர் பீறிட்டது. அடக்கிக் கொண்டு வெளியேறத் தொடங்கினாள்.

ராஜகோபாலன் தட்டிவிட்ட பூபழத்தட்டு சிதறல்களோடு தரையில் அப்படியே கிடந்தது.

அவள் போன பிறகு பூமா குனிந்து அதை எடுத்தாள். ராஜகோபாலனையும் கூர்மையாகப் பார்த்தாள்.

''இப்படி கோபப்பட்றதால எதாவது ஆகப் போறதா?

இதனால் நமக்குத்தான் நஷ்டம். எதுவுமே நடக்கலைங்கற மாதிரி நாம இப்ப நடந்துண்டாதான் நம்ம பொண்ணை நாம இன்னொருத்தனுக்கு கல்யாணம் பண்ணித்தர முடியும். திடமும் தைரியமும்தான் இப்ப முக்கியம். கோபமும் கொந்தளிப்பும் இல்லை...''

அவளது பதிலில் நிறைய விவேகம்... அது ராஜகோபாலனுக்கு புரியவில்லை. ஆனால் சித்ரா புரிந்து கொண்டது போல அவரை நெருங்கினாள்.

''அப்பா...''

''என்னடா கண்ணு...?''

''கவலைப்படாதீங்கோப்பா. எனக்கு அத்தான் புருஷன் இல்லைன்னு ஆயிடுத்து. எனக்கு என்னை பாத்துக்கத் தெரியும்பா.'' அவளிடம் ஆச்சரியப்படும்படி சமாதானம்.

ராஜகோபாலன் மகளை ஏறிட்டார்.

''என்கிட்டேயும் காசு பணமும் அந்தஸ்தும் இருந்திருந்தா இப்படி நடந்துருக்காது தானே?'' - கேட்கும் போதே கண்ணீர் கொப்பளித்தது.

''பெரிய காசு பணம்... அத தூக்கி உடப்புல போடுங்கோ... ஆகற காரியத்த பாருங்கோ...''

''இல்லடா... எனக்கு மனசு ஆறவே மாட்டேங்கறது. அந்த ஆள் பிளாக் மெயில் பண்ணி இந்த கல்யாணத்தை நடத்தறான். என் மருமானும் அதுக்கு ஒத்துப் போயிட்டான். கல்யாணம்கறது ஆசையா பண்ணிக்கற விஷயம்டா...''

''எல்லாம் சரிப்பா... ஆனா எல்லாம்தான் கை மீறி போயிடுத்தே! திரும்பத் திரும்ப அதைப் பேசறதால என்ன பிரயோஜனம்?''

''இல்லடா குழந்தே... எனக்கு உன் கல்யாணம் நடக்கலேன்னா கூட பரவால்லடா. இப்படி பிளாக் மெயில் பண்ணி ஒன்னு நடக்கவே கூடாது...''

''சரி... என்ன பண்ணப் போறேள்?''

- சித்ரா கேட்ட கேள்விக்கு உடனடியாக அவரால் பதில் கூற முடியவில்லை. ஆனால் விபரீதமாக எதையோ செய்யப்போகும் பாவனை மட்டும்



முகத்தில் வந்து தேங்கியது!

---

## 9

---

படு உற்சாகமாக இருந்தார் சடகோபன். தான் நினைத்தபடியே எல்லாம் நடக்கப்போகும் இறுமாப்பு. கோயிலுக்கு போன இடத்தில் பட்டர்கள் எல்லாம்கூட பார்த்துக் கேட்டனர்.

''என்ன ஓய்... புளியங்கொம்பா பிடிச்சுட்டீர் போல இருக்கே?''

''பின்ன... நான் என்ன அன்னக் காவடியா... இல்ல என் பிள்ளைதான் என்ன பிச்சைக்காரனா...?''

- கையில் ஐந்து பவுன் பிரேஸ்லெட் ஆட அவர் கேட்ட விதத்தில் அநியாயத்துக்கு ஒரு இறுமாப்பு.

''ஆமா... உம்ம மச்சினனை எப்படி சமாளிச்சீர்?''

''அவன் என்ன பெரிய பில் கிளிண்ட்டன் இல்ல நான்தான் என்ன ஒசாமா பின்லேடன் - ஒருத்தரை ஒருத்தர் சமாளிக்க...? ஆஃப்ட்ரால் சமையக்காரன். அவனைப் போய் பெரிசா பேசிண்டு...?''

அவரது அலட்சியக் கொடி பெரிய கோபுரத்துக்கும் மேல் ஏறி பறக்கத் தொடங்கியது.

இதில் பார்க்கின்றவர்களிடம் எல்லாம் ''நிச்சயத்துக்கு வந்துடும்யா... ஏமாத்திடாதீர்...'' என்கிற அன்புக் கட்டளை வேறு...

இந்த கித்தாப்பும் பம்மாத்தும் தாயார்

சன்னதியில் ஒரு மூலையாகப் பார்த்தபடி அமர்ந்திருக்கும் ராஜகோபாலன் காதுக்கும் போயிற்று.

போட்டுக் கொண்டிருக்கும் பூணூலையே அறுத்துப் போடுமளவு ஆவேசம் மண்டிக் கொண்டு வந்தது. 'வீட்டில் இருந்தால்தான் இதே நினைப்பாக இருக்கிறது என்று கோவிலுக்கு வந்தால் இங்குமா இந்த மனிதனின் திமிர்ப் புராணம்?'

மனது ரணமாகி கண்களும் குளமாக - பெருமாளைக்கூட சேவிக்காமல் கிளம்புகிறார்.

எதிரில் ஒரு பஜனைக் கோஷ்டி 'விட்டலா' பாட்டு பாடிக்கொண்டு காவேரியை நோக்கி போய்க் கொண்டிருந்தது.

''என்னய்யா விசேஷம்?''

''இன்னிக்கு துலாக்காவேரியாச்சே?''

- துலாக்காவேரி என்றவுடன்தான் நாள் கிழமை நினைப்பே வந்தது.

காவேரி துள்ளிப் புரண்டு ஓட - அவளை ஊரே கொண்டாடி மகிழும் ஒரு நாள்...

இன்று அவளிடம் பிரார்த்தனை செய்து கொண்டால் நினைத்தது நடக்குமாம். போற வழிக்கும் புண்ணியமாம்.

கதைக்கா பஞ்சம்...?

பேசாமல் ஆற்றில் போய் விழுந்து விடலாமா என்றுகூட தோன்றிற்று ராஜகோபாலனுக்கு.

யாரைப் பார்த்தாலும் அவரையே பார்க்கும் ஒரு கொடுமை வேறு... பின்பு அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள். அவர் காதுபடவும்கூட அது விழுகிறது.



''என்ன... ராஜகோபாலனை அவன் மாப்ளை கழுத்தறுத்துட்டானாக்கும்? பணம் எப்பவும் பணத்தோடதான்யா சேரும்.''

''ஒன்னு மட்டும் நிச்சயம். அவன் பொண்ணு அந்த சீனுவையே நினைச்சிண்டிருந்தது ஊருக்கே தெரியும். ஆகையால் இந்த ஊரில் அவளுக்கு நல்ல மாப்ளை அமைய மாட்டான். வெளியூர்தான்.''

- எல்லார் பேச்சும் ஊசி எடுத்து குத்துகிறமாதிரி இருந்தது. அதனால் மனதில் ரகசியமாக எடுத்திருந்த முடிவும் உறுதிப் பட்டுக் கொண்டே போனபோது, சித்திரை வீதி முக்கில் எதிரில் பைக்கில் வந்து கொண்டிருந்த சீனு அவரைப் பார்த்து பைக்கை நிறுத்தினான். 'நிர்பந்தக் கல்யாணம் செய்து கொள்கிறான். அதில் துளியும் அவனுக்கு சந்தோஷமில்லை' என்பது அவன் முகத்தின் நான்கைந்து நாள் தாடி மீசையிலும் கசங்கிய கண்களிரண்டிலும் நன்கு தெரிந்தது.

''மாமா...''

''வேண்டாம் மாப்ள... என்னண்ட எதுவும் பேச வேண்டாம்.''

''என்ன மன்னிச்சுடுங்க மாமா...''

''அடபோடா... மன்னிப்பாம் மன்னிப்பு. புடலங்கா...''

''சத்யமா எனக்கு இந்தக் கல்யாணத்துல இஷ்டமில்ல மாமா...''

''அப்ப முடியாதுன்னு சொல்ல வேண்டியது தானே?''

''என்ன மாமா நீங்க... அப்படி சொல்லப் போய்தான் தூக்குல தொங்கப்

போயிட்டார்.''

''எல்லாம் போலி மிரட்டல்.''

''இல்ல... அவருக்கு இருக்கற அந்தஸ்த்துக் காய்ச்சல் பத்தி எனக்கு தெரியும். அவருக்கு தன் விருப்பப்படிதான் எல்லாம் நடக்கணும்; அவர் பேச்சத்தான் எல்லாரும் கேட்கணும்கறதுதான் உங்களுக்கும் தெரிஞ்ச விஷயமாச்சே...?''

''எது எப்படியோ... உங்க குளறுபடியில என் பொண்ணை நடுத்தெருவுல நிறுத்திட்டேன்...''

''நான் என்ன மாமா பண்ணட்டும். என்னை உயிரைக் காட்டி மிரட்டி பணிய வெச்சுட்டாரே? மீறி நான் நடந்துண்டு அவரும் செத்து வெச்சா ஊர் என்ன சொல்லும்? ஒரு பொண்ணுக்காக அப்பனையே கொன்னவன்னு என்னை சொல்லாதா? அவர் உசுரோட இருக்கறவரை எனக்கு வேற வழியே கிடையாது மாமா.''

''சரி... அப்ப உங்கப்பா தவிர வேற யாரும் உனக்கு பிரச்சினையில்லை தானே?''

''வேற யார் மாமா பிரச்சினை? அவர்தான்... அவர் மட்டும்தான்.''

இந்த சம்பாஷணையின் போதே சுற்றிலும் சிலர் சேர்ந்து கொண்டு ராஜகோபாலனைப் பரிதாபமாக பார்க்கத் தொடங்கினர்.

''என்ன ஓய்... மாப்ளை உம்மை சமாதானப்படுத்தறானா... அதுக்கு நடுத்தெருதான் கிடைச்சுதா?''

''அடப்போய்யா... நாங்க என்னத் தையோ பேசிண்டிட்டுப் போறோம்.



பெரிசா கேட்டுண்டு வந்துட்டீர்?''

ராஜகோபாலன் பதிலுக்கு சிறிவிழ, சீனு அதற்குமேல் நிற்கப் பிடிக்காமல், பைக்கில் அங்கிருந்து கிளம்பினான்.

ராஜகோபாலனும் பதட்டமும் கலக்கமுமாக வீட்டுக்குள் நுழைந்த போது ஒரு வயர்க்கூடையில் பூ, பழம், குங்குமம், அகல் விளக்கு என்று எல்லாவற்றையும் எடுத்து வைத்துக் கொண்டு காவேரிக்கு கிளம்பிக் கொண்டிருந்தாள் சித்ரா.

ஒன்றுமே நடக்காத மாதிரி - பார்க்க பளிச்சென்று இருந்தாள். அதே சமயம் ஏதோ ஒரு திடமான முடிவு எடுத்துவிட்ட மாதிரியும் தோன்றியது.

உள்ளே நுழையும் தகப்பனை பாசமாகப் பார்த்தாள்.

''எங்கடா கண்ணு கிளம்பிட்டே?''

''காவேரிக்குப்பா...''

''ஓ... இன்னிக்கு துலாக் காவேரில்ல...''

''ஆமாம்ப்பா... அதான் பூஜை பண்ண கிளம்பிண்டு இருக்கேன்.''

''சரி... பார்த்துப் போய்ட்டுவா...'' என்றபடியே உள்ளே போய் ஊஞ்சலில் சாய்ந்தார்.

பூமா வந்தாள்.

''ஆமா... நீ போகலையா?''

''வெளிய போகவே பிடிக்கலை...''

''அதான் உன் பொண்ண மட்டும் அனுப்பிட்டியாக்கும்?''

''ஆமாம்... நீங்க கேள்விப்பட்டேளா?''

''என்ன?''

''சீனுவுக்கு பாத்துருக்கற அந்த பொண்ணும் இன்னிக்கு காவேரிக்கு வந்து பூஜை பண்ணப்போறதாம்.''

''என்ன இது புதுசா இருக்கு... காவேரில் ஸ்நானம்ல பண்ணணும்? பூஜை எல்லாம் ஆத்துலதானே பண்ணுவா?''

''இல்ல, அவாத்துல சுமங்கலிப் பிரார்த்தனை மாதிரி துலாக் காவேரியன்னிக்கு காவேரிக்கு பூஜை பண்ணுவாளாம்.''

''பண்ணட்டும் பண்ணட்டும். இப்படி எல்லாம் பண்ணி நிறைய காசு பணம் சம்பாதிச்சாதானே என்னை மாதிரி இளிச்சவாயனை எல்லாம் ஏமாத்தி வயித்தெரிச்சலை கொட்டிக்கலாம்.''

''திரும்ப ஆரம்பிச்சுட்டேளா. சித்ராவே சாதாரணமா எடுத்துண்டுட்டா. நீங்க என்ன?''

''அவ சாதாரணமா எடுத்துக்கல பூமா. அவ ஒரு முடிவோடதான் இருக்கா. அது தெரியுமா உனக்கு?''

''என்ன இது குண்டத் தூக்கி போட்றேள்?''

''குண்டாவது கிண்டாவது... ஒரு சினிமாக்காரன் வந்து நடிக்கக் கேட்டான் தானே?''

''ஆமாம்...''

''அவனுக்கு போன் பண்ணி சம்மதம் சொல்லியிருக்கா...''

''அய்யய்யோ... எப்போ? எனக்கு தெரியாதே!''

''நீதான் அடுப்படி பூனையாச்சே. ஆனா எனக்கு எல்லாம் தெரியும்.''

''என்னன்னா இது... நமக்கு அதெல்லாம் சரிப்பட்டு வருமா?''

''வரப்போறது... நீயும் பாக்கப் போறே!



நடிகையானா நமக்கும் பேர் தானே?''

''த்தூ... போரம் பேர்... நடிக்கப்போனா எல்லாத்துக்கும் தயாரா இருக்கணும்னு சொல்லுவா, என்ன பேசறேள் நீங்கோ.''

''ஏன் கத்தறே... நானே தெரிஞ்சும் தெரியாம இருக்கேன். நீயும் அப்படியே இரு. ஒரு வகைல இது சரியான முடிவு. நிறைய பணம் காசுன்னு வந்துடுத்துன்னா அப்புறம் எதுவும் ஒண்ணும் பண்ணாது.''

''மாட்டேன். நான் சம்மதிக்க மாட்டேன். அவமட்டும் அப்படி நடந்துண்டா நான் தூக்குல தொங்கிடுவேன்.''

''என்னது... தூக்குல தொங்கிடுவியா?''

''ஆமா... எனக்கு மானம்தான் பெரிசு...''

''இப்ப எங்க இருக்கு அது நம்மகிட்ட... மானம் பெரிசாம் மானம். மண்ணாங்கட்டி.''

''உளறாதேள்... இதுக்கு நான் ஒருக்காலும் சம்மதிக்க மாட்டேன்.''

பூமா பொங்கி எழுந்தாள். ராஜகோபாலன் வெறித்தார். நெடுநேரம் முறைத்துவிட்டு ''சரி... என்ன பண்ணணும்கறே...? என்னை மாதிரியே ஒரு சமையக்காரனுக்கு சித்ராவைக் கொடுத்துடலாம்கறியா...?''

''ஏன்... அதுல என்ன தப்பு? சமையக்காரன்னா மட்டமா? உங்கள கல்யாணம் பண்ணிண்டு நான் என்ன கெட்டா போயிட்டேன்?''

''என்னத்தடி பெரிசா சுகத்தை அனுபவிச்சுட்டே? சொந்தத் தங்கையே என்னை மதிக்கலை...''

''காசு பணம் இருக்கோ இல்லியோ... மானம் மரியாதையாவது இருக்கு இப்போ.

இவ நடிக்கப்போனா அதுவும் போயிடும்.''

''மொத்தத்துல அவள அவ விருப்பப்படி வாழ விடப்போறதில்ல நீ...''

''அவளோட தப்பான விருப்பப்படின்னு சொல்லுங்கோ.''

''உனக்கு அது தப்பான விருப்பம். ஆனா அவளுக்கு அது சரியான விருப்பம் பூமா.''

''சரி... இப்ப சீனு அவளைக் கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னா நடிக்கப் போவாளா?''

''இது விதண்டாவாதம்.''

''என்ன சொன்னாலும் சரி... அவ மட்டும் நடிக்கறேன் - சம்பாதிக்கறேன்னு இந்த வீட்டைத் தாண்டினா என் உசுர் இந்த உடம்பைத் தாண்டிடும். ஞாபகத்துல வெச்சுக்கும்...''

- இருவரின் உக்ரமான சம்பாஷணையும் வெளியில் சித்ரா காதிலும் விழுந்து கொண்டிருந்தது! பூஜை பொருட்களோடு வெளியேறியவள் தீப்பெட்டி இல்லாதது தெரிந்து திரும்பியபோது அப்பா அம்மா பேச்சு அப்படியே வாசலில் நிறுத்திவிட்டது.

அம்மாவிடம் இப்படி ஒரு தீவிரமா?

அவளுக்குள் தடுமாற்றம்.

'அங்கே அவன் விருப்பப்படி நடக்க அப்பா தடை. இங்கே என் வரையில் அம்மா தடை.

எந்தப்பக்கம்தான் போவது?'

- துள்ளிப் புரண்டு ஓடும் காவேரிதான் மனக்கண்ணில் தெரிந்தது.

'அருமைக் காவேரியே... பேசாமல் உன்னுள் இறங்கி விடுகிறேன். அதுதான் எனக்கிருக்கும் ஒரே வழி...'



அவள் புதிய சங்கல்பத்தோடு தீப்பெட்டி இல்லாமலே கிளம்பினாள்.

உள்ளே ராஜகோபாலன்கூட மனைவியின் தீவிரத்தை உத்தேசித்து ஒரு புதிய முடிவிற்கு வந்திருந்தார்.

அது ஒட்டுமொத்தமாக சடகோபன் மேல்தான் போய் நிலைகுத்தி நின்றது.

---

## 10

---

ஒரு ஓட்டப்பந்தய வீராங்கனையின் வேகம் காவேரியிடம். நொப்பும் நுரையுமாக இந்தக் கரைக்கும் அந்தக் கரைக்குமாக அவள் ஓடி வருவதைப் பார்க்கையில் ரசனையோடு பயமும் துளிர் விட்டது.

அம்மாமண்டபக் கரைமேல் ஒரே கூட்டம்.

படித்துறை கொள்ளாத ஜனங்கள்.

வெளியே ஏகத்துக்கும் கார்கள். அதில் ஒரு படகுக்கார் ஆடிட்டர் நரசிம்மன் குடும்ப சமேதராக வந்திருப்பதை சொல்லாமல் சொன்னது.

பட்டு வேட்டி துண்டு என்று, குளிக்க வந்திருக்கும் இடத்திலும் நரசிம்மனிடம் பணக்கார பவிசு. அவரது மனைவியும் மகளும்கூட அலங்கார சொரூபிணிகளாகத்தான் வந்திருந்தனர்.

வயர்க்கூடையும் கையுமாக வந்திருந்த சித்ரா, கூட்டத்தில் ஒரு மூலையில் நின்று கொண்டு ஆடிட்டர் நரசிம்மன் மகளை - அதாவது தன் அத்தானுக்கு மனைவியாக

வரப்போகும் அவனையே வெறித்துக் கொண்டிருந்தாள். நல்ல ஊட்டமான உடம்பு, கழுத்து கொள்ளாதபடி நகை வேறு. பார்த்துக் கொண்டிருக்கும் போதே சடகோபனின் பிரவேசம் வேறு அங்கே...

''வாரும் சம்பந்தி... வாரும்... என்ன காவேரி ஸ்நானமாச்சா?''

''இல்ல இனிமேதான்... என்ன பூஜை எல்லாம் ஆச்சா?''

''முடிஞ்சது. பத்து பொம்மனாட்டிகளுக்கு புடவை ரவிக்கையும் வெச்சுக் கொடுத்தாச்சு. முழுக்கு போட்டுட்டு நேரா போய் பெருமாள சேவிச்சா தீந்துது...''

''ரொம்ப சந்தோஷம்... ஆமா இங்கையா முழுக்கு போடப் போறேள்...?''

''ஆமா... ஏன்?''

''ஒரே கூட்டமா இருக்கே... கச்சடாவா இருக்குமேன்னு பாத்தேன்.''

''அதெல்லாம் பாத்தா முடியுமா?... தண்ணி போற வேகத்துக்கு சிந்தாமணி படித்துறைல தின்னுகூட குளிக்க முடியாதே.''

- சடகோபனும் நரசிம்மனும் பேசிக் கொள்வதும், பக்கமாக அந்த இரண்டு பெண்களும் மதர்ப்பாக சிரிப்பதும் சித்ராவை அனலில் தூக்கிப் போட்ட மாதிரி வறுத்தெடுத்துக் கொண்டிருந்தது.

சித்ரா நெருப்பாக நின்றபடி பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்தப் பெண் ரேவதி, காவேரிக்கரை என்றும் பாராமல் சடகோபன் காலில் விழுகிறாள்.

அவரும் ஆசீர்வதிக்கிறார்.

பலரும் கூட பார்க்கின்றனர்.

சித்ராவுக்கு இதயத்தில் மேல்



திமுதிமுவென்று குத்து விழுவது போல் இருந்தது.

அடுத்த கஷணமே ஆற்றில் இறங்கி அப்படியே அதோடு போய்விடும் ஆவேசம் தொற்றிக் கொண்டது.

ஆனால் எதிரில் அலை மோதும் கூட்டம் கட்டிப்போட்டது.

'பேசாமல் சிந்தாமணிப் படித்துறை பக்கமோ இல்லை அதையும் தாண்டியோ போய் ஆற்றில் இறங்க வேண்டியதுதான்.'

தீர்மானித்தவளாக அங்கிருந்து புறப்பட்டாள். கரை ஓரமாக மாந்தோப்பை ஒட்டி நடக்கத் தொடங்கினாள்.

மனதில் சொல்ல முடியாத அளவு வெறுமை.

இப்படி எல்லாம் ஆகும் என்று கனவில் கூட நினைத்திராத வெறுமை...

'இதே பாதையில், பக்கத்து தோப்பில் சீனுவோடு என்னமாய் கொட்டமடித்திருப்போம்?'

கேள்வியோடு பார்வை தோப்பை பார்த்தது. அணில்கள் ஓடிப்போய் விளையாட்டு காட்டிக் கொண்டிருந்தன.

வளைவாக ஒரு கிளை... அதில் சாய்ந்து அவன் முத்தமிட்டது நினைவில் எழும்பி அந்த இன்ப நினைப்பை துன்ப நினைப்பாக்கி மனதைச் சுட்டது.

இனி அந்த முத்தமெல்லாம் அந்த பணக்காரிக்கு.

அவன் உதடு தனக்கு மட்டுமே என்று நினைத்தது எத்தனை மடமை...?

கேள்வியும் கொந்தளிப்புமாக நடந்தவள் டம்மென்று ஒருவர் மேல் மோதிக் கொண்டாள். நிமிர்ந்து பார்த்தபோது பக்கென்றது.

அவர் சடகோபன்.

''என்ன... கண்ணு தெரியலியாக்கும்?''

அவரிடம் கரிசனமோ பாசமோ இல்லாத கடுமையான கேள்வி. அதுவும் மூனாவது மனிதனைப் போல...

''நா... நா உங்களப் பாக்கல அத்திம்பேர்...''

''நீ எல்லாம் எதுக்கு என்னைப் பாக்கறே..., என் பிள்ளை மாதிரி வயசுப் பையன்னா பாப்பே!''

சரேலென்று நெஞ்சைப் பிளந்து குத்திற்று அந்த சொற்கள். அப்படியே ஓடிப்போய் ஆற்றில் விழத்தோன்றிற்று. அழுகை கண்ணைக் கவ்விற்று.

''போ போ...'' - அலட்சியமாக அவளைப் பார்த்து விட்டு பக்கமாக உள்ள சரிவில் இறங்க ஆரம்பித்தார்.

இறங்கினால் காவேரி.

கரையிலும் சின்னதாக ஒரு கருங்கல்.

அதில் வேட்டியை நனைத்து கும்மி வைத்துவிட்டு அவர் கால்கள் அந்த ஆற்றின்உள் இறங்கத் தொடங்கின.

அதே சமயம் கரை ஓரமாக உள்ள மாமரத்தின் பின்னால் இருந்து ஒரு உருவம் முறைப்போடு வெளிப்பட ஆரம்பித்தது. முகத்தையும் முட்டாக்கு போட்டு மூடிக் கொண்டிருந்தது அந்த உருவம்.

அது சடகோபனைத் தொடர்ந்து ஆற்றில் இறங்கியது. முதுகைக் காட்டியபடி நிற்கும் அவரை நோக்கி மெல்ல நடக்கத் தொடங்கியது.

நீரில் சலசலப்பு சப்தம் கேட்டு சடகோபன் திரும்பினார்.



அடுத்த க்ஷணமே அந்த உருவம் அவர் மேல் பாய்ந்தது. சில நொடிப் பொழுதுகள்தான்...

அவரை நீருக்குள் அமுக்கியபடி அதுவும் அமுங்கியது.

அதன்பின் அந்த இரண்டு பேரையுமே நீர் மேல் பார்க்க முடியவில்லை!

ஆனால் சற்றுத் தள்ளி அதே போல மூழ்கி உலகை விட்டே போக விரும்பிய சித்ராவை மட்டும் கரை மேல் போய்க் கொண்டிருந்த ஒருவன் பார்த்துவிட்டு பதறியபடி ஆற்றில் பாய்ந்தான்.

அவளது தலைமுடியைப் பிடித்து இழுத்து வந்து கரையிலும் போட்டான்.

''எம்மா... என்னாச்சு உனக்கு? இப்படியா ஆழமான இடத்துல பயமில்லாம போய் குதிப்பே? நான் பாக்கலேன்னா போயிருந்திருப்பியே...''

- என்று அவள் தற்கொலை எண்ணம் புரியாத படிக்கு பேசி அவளுக்கு அதிர்ச்சியும் அளித்தான்.

அவள் ஒரு ஓரமாகப் போய் சோர்வோடு அமர்ந்தாள்.

''பாத்து வீட்டுக்கு போய்ச் சேரு.'' - என்று கூறி விட்டு அவன் நகரவும், எதிரில் ஈரம் சொட்டச் சொட்ட கரை ஏறி வந்து கொண்டிருந்தார் ராஜகோபாலன்.

மகளைப் பார்த்துவிட்டு நெருங்கி வந்தார்.

''அப்பா...''

''நீ எங்கடா இந்தப்பக்கம் வந்தே... அம்மா மண்டபம் இருக்கோல்லியோ?''

''அங்கல்லாம் அத்தனை சுலபத்துல விழுந்து உசுரை விடமுடியாதே...

அதான்...''

- அவள் குமுறினாள். அவர் அருகில் அமர்ந்து அணைத்துக் கொண்டார்.

''சரி சரி வா... உனக்காகத்தான் நானே உசுரோட இருக்கேன். நீயும் போயிட்டா நான் என்ன பண்ணுவேன். வா... வா...''

- என்றபடி மகளை அணைத்துக் கொண்டு எழுந்து நடக்க ஆரம்பித்தார்!

---

## 11

---

சடகோபனின் ஈர வேஷ்டியை வத்சலாவிடம் கொடுத்து விட்டு கலங்கியபடியே பேசினான் சீனு...

''அம்மா! அவரை எங்க தேடியும் கிடைக்கல. சிந்தாமணிக் கரை ஓரமா துணிக்கல் மேல இந்த வேஷ்டி மட்டும்தான் இருந்தது. இதை வெச்சுப் பார்த்தா அவர் ஒரு வேளை ஆத்தோட போய்ட்டாரோன்னு...''

- சொல்ல முடியாதபடி வாய்விட்டு வெடித்து அழுதான். அவனைச் சுற்றி ஒரு கூட்டமே நின்று கொண்டிருந்தது.

வத்சலா அடுத்த நொடியே மயக்கமடித்து விழுந்தாள்.

அவ்வளவுதான்...

சடகோபனைக் காவேரி விழுங்கி விட்டதாக ஒரு பேச்சு ஊர் முழுக்க பரவ ஆரம்பித்தது.

செய்தி நரசிம்மனையும் அடைந்து அவர் அலறிப்புடைத்துக் கொண்டு ஓடி வந்தார். காரில் இருந்து அவர் இறங்கி வந்த



விதத்தில் அடுத்து இனி என்னாகுமோ என்கிற கவலை பட்டவர்த்தனமாகத் தெரிந்தது.

உள்ளே நுழைந்தவர் சீனுவைக் கட்டிக் கொண்டார்.

''மாப்ள... என்ன மாப்ள இது... அப்பாபத்தி என்னென்னவோ கேள்விப்பட்டேனே?''

- கண்களை கசக்கி விட்டுக் கொண்டார்.

''என்ன பண்றது... விதி முடிஞ்சுடுத்து. காவேரி கூப்ட்டுண்டுட்டா...'' - சீனு அழுதபடியே சொன்னான்.

''நன்னா தெரியுமா... காவேரிலதான் போனாரா?''

''வேற எங்கையாவது போயிருந்தா இந்த நேரத்துக்கு வந்துருக்கணுமே?''

''அப்ப உடம்பு...?''

''அம்புலிங்கறவன்கிட்ட சொல்லியிருக்கேன். அவன்தானே ஆத்தோட போற உடம்புகளை எல்லாம் ஆத்துல இறங்கி எடுத்துக் கொடுக்கறவன்.''

- சீனு சொன்னது போலவே அம்புலி என்பவனும் ஆத்தில் இறங்கி மைல் கணக்கில் நீந்தித் தேடியதில் கல்லணை அருகே ரப்பர் பந்தாட்டம் ஊதிப்போய் ஒரு உடம்பு கிடைத்தது.

இழுத்து கரையில் போட்ட போது நாற்றம் சகிக்கவில்லை.

லேசான வழுக்கை தலைதான் அது சடகோபன் என்று அடையாளம் காண உதவிற்று. மற்றபடி எந்த விதமான அடையாளத்தையும் பார்க்க முடியாதபடி 'நான் நான்' என்று மார் தட்டிய அந்த மனிதர்

அழுகிய பிண்டமாகக் காட்சி தந்தார்.

அதை வத்சலா பார்த்தால் உயிரையே விட்டாலும் விட்டு விடுவாள் என்று அப்படியே அங்கேயே கரை ஓரமாகப் போட்டு கொளுத்தி விட்டுத் திரும்பினான் சீனு.

என்ன இருந்தாலும் சொந்த மாப்பிள்ளை ஆயிற்றே? ராஜகோபாலன் கலந்து கொள்ளாவிட்டால் எப்படி?

எனவே அவரும் காரியத்துக்கு வந்திருந்தார். சிதைக்கு தீ மூட்டிய கையோடு அப்படியே ஆற்றில் இறங்கி ஒரு முழுக்கு போட்டுவிட்டு வீட்டிற்கும் திரும்பி விட்டார்.

வீட்டில்...

''என்னா...''

''என்ன பூமா?''

''உடம்பு எப்படி இருந்தது...?''

''அதை ஞாபகப்படுத்தாதே... ஏதோ காரியம் பண்ண முடிஞ்சதே...''

''சித்ரா வரமாட்டேன்னுட்டா. அங்கதான் இருக்கா. அவதான் இப்ப உங்க தங்கைக்குக் காவல்.''

''இன்னும் அவளுக்கு சொரணை வரலையா...? அதான் எல்லாம் முடிஞ்சு போச்சே...''

''முடிஞ்சுதான் போச்சு. உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமா?''

''என்ன?''

''நிஜமா தெரியாதாக்கும்?''

''என்னடி கேள்வி இது... தெரிஞ்சா நான் ஏன் உன்னைக் கேக்கறேன்.''

''உங்க மருமான்... அதான் நம்ம சீனு இருக்கானே அவன் அந்த நரசிம்மாச்சாரி



யண்ட அவர் பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதுன்னு சொல்லப் போறானாமே?''

பூமா கேட்ட மறுநொடி அதி பிரகாசமானது ராஜகோபாலனின் முகம்.

''நிஜமாவா?'' என்ற கேள்வி காற்றுக் குரலில் வெளிப்பட்டது.

''என்ன இது... தெருவே பேசிக்கறது- உங்களுக்கு எப்படி தெரியாம போகும்?''

''நான் எங்க இங்க இருந்தேன். காவேரிக் கரைக்கு போய் மரத்தடில படுத்துட்டேன்.''

''உங்களோட வில்லனை அவ கொண்டு போயிட்டதனால அவளுக்கு நன்றி சொல்லப் போயிட்டேளாக்கும்...?''

''தப்பு பூமா... அந்த ஆளால நம்ம சித்ராவுக்கு இடைஞ்சல் வந்திருக்கலாம். ஆனா அதுக்காக அவர் சாகணும்கற அளவுக்கெல்லாம் நான் நினைக்கல. அவர் செத்தா என் தங்கைன்னா விதவை ஆவா. அதை யோசிச்சியா நீ...''

''எப்படியோ... அவர் சாவு ஒரு வகைல நல்ல முடிவைத்தான் கொடுத்துருக்கு. சின்னஞ்சிறுசுக இனிமே நன்னா இருந்தா சரி...''

பூமா கைகளைக் கூப்பி பிரார்த்தித்துக் கொண்டாள். ராஜகோபாலனும் கொதிப்பெல்லாம் அடங்கி லேசாகி விட்டிருந்தார்.

'மலைபோல வந்தது...

ஆனால் காவேரி அதைப் பனிபோல் ஆக்கி விலக்கி விட்டாளே...

வாழ்க துலாக் காவேரியின் அருள் கொற்றம்.'

அவர் மனதில் காவேரியை உத்தேசித்த நெகிழ்ச்சியும்...

## 12

குட்டி போட்ட பூனைபோல நடந்து கொண்டிருந்தார் நரசிம்மன்.

போட்ட திட்டமெல்லாம் குட்டிச் சுவரான குமைச்சல். அப்போது பார்த்து ராஜகோபாலன் அங்கே நுழையவும், நரசிம்மனுக்கு டென்ஷனாகி விட்டது.

''வாய்யா... வா... உன் மருமான் சொன்னதைக் கேட்டியா?''

''அதுக்கென்ன...?''

''அதுக்கென்னவா... எல்லாம் உன் வேலைன்னு நினைக்கறேன். நீதான் உன் பொண்ணை விட்டு மயக்கி வெச்சிருக்கியே அவனை...''

''வாயை மூடுங்காணும்... இந்த மயக்கறது ஏமாத்தறதெல்லாம் எனக்குத் தெரியாது. அதெல்லாம் உம்ம சரக்கு. பணம் இருந்தா எதை வேணும்னாலும் செஞ்சுடலாம்னு நினைச்சீர். மாப்ளை மண்டையப் போடவும் எல்லாம் பாழாப் போச்சு.

ஏதோ எங்கள மாதிரி ஏழைகள்மேல அந்த காவேரியோட கருணை இருக்கே... அது போதும் எனக்கு...''

''ஆமா... இப்படி பிரசங்கம் பண்ணத்தான் இங்க வந்திராக்கும். என்னய்யா விஷயம்?''

''உம்... ஒரு அஞ்சாயிரத்தை அட்வான்ஸா விட்டெறிஞ்சேளே - அதை திருப்பிக் கொடுத்துட்டுப் போக வந்தேன்.



பிடியும் - வரேன்...''

நரசிம்மன் கொடுத்த அதே நோட்டுக்கட்டை அவர் எறிந்த அதே திசையில் வீசி எறிந்து விட்டு திரும்பிக் கிளம்பினார் ராஜகோபாலன்.

நடையில் நல்ல தெம்பு. நரசிம்மனுக்கு நாடி நரம்பெல்லாம் முறுக்கிக் கொண்டது. இந்த சமையல்காரன் கரம் இப்படி திடீரென்று பலமடையும் என்று கண்டாரா என்ன...?

குமைச்சல் கூடிப்போனது. சுச்சிதமாக தணிக்கும் நோக்கத்தோடு நாமகிரி வந்தாள்.

''அந்த மனுஷன் பேசினதையெல்லாம் கேட்டுண்டுதான் இருந்தேன். நினைக்கக்கேடு தனக்குங்கற மாதிரி ஆயிடுத்து நிலை...''

''என்ன நாமகிரி எரியற நெருப்புல எண்ணெயை விட்றியா... இப்பவும் இந்தக் கல்யாணத்தை என்னால நடத்த முடியும். தெரிஞ்சுக்கோ...''

''வேண்டாம்னா... இத்தோட விட்றுங்கோ. கடவுளுக்கே இதுல இஷ்டமில்லை. அதனாலதான் அந்த மனுஷன் ஆத்தோட போய்ட்டார், விட்றுங்கோ இதை...''

''நீ அப்படி சொன்னியேன்னுதான் நான் இப்படி சொன்னேன். மத்தபடி இனி அந்தப் பையனே வந்து 'நான் உங்க பொண்ணையே கல்யாணம் பண்ணிக்கிறேன்'னு சொன்னாலும் நான் சம்மதிக்கப் போறதில்ல. ஞாபகம் வெச்சுக்கோ. அதேசமயம் என்னை அலட்சியம் பண்ணிட்டு அவன் எப்படி அந்த

சமையக்காரன் பொண்ணோட வாழ்ந்துடறான்னு பாக்கறேன்...''

- நரசிம்மனின் பேச்சில் வன்மம் நன்றாக வெளிப்பட்டது. நாமகிரியால் அதற்காக வருத்தம்மட்டுமே படமுடிந்தது. வேறு என்ன செய்துவிட முடியும்?

சடகோபனின் கர்ம காரியங்கள் எல்லாம் ஒரு வழியாக முடிந்துவிட்டன. எப்பொழுது காரியமெல்லாம் முடியும். சீனுவின் கல்யாண விஷயம் பற்றி எப்போது பேசலாம் என்று காத்திருந்ததுபோல கிழவி வாயைத் திறந்தாள். அதுவும் எல்லோரும் கூடத்தில் உட்கார்ந்திருக்கும் நேரமாகப் பார்த்து... கூடத்தில் ஜோதிடர் கிருஷ்ணமாச்சாரியும் இருந்தார்.

''ஏண்டா சீனு... ஆடிட்டர் பொண்ணை துணிச்சலா வேண்டாம்னு சொல்லிட்டே. அப்படியே சித்ராவைத்தான் பண்ணிப் பேன்னு ஒரு வார்த்தை சொல்லிட வேண்டியதுதானே?''

- சீனு பாட்டியைக் கூர்மையாகப் பார்த்தான்.

''என்ன பாக்கறே... அதான் சாவு காரியம்லாம் முடிஞ்சுடுத்தே...?''

''காரியம் முடிஞ்சிருக்கலாம். ஆனாலும் அந்த துக்கம் இன்னும் தீரலை பாட்டி. இப்ப எதுக்கு கல்யாணப் பேச்சு?''

''எப்பவாவது அதைப்பத்தி பேசித்தானே தீரணும்.''

''நான் பண்ணிண்டா சித்ராவைதான் பண்ணிப்பேன். ஆனா இப்ப இல்ல. இன்னும் சில மாசம் போகட்டும். நான்



இங்க ஏதாவது ஒரு நல்ல வேலைல சேர்ந்துடறேன். இப்ப என்ன கிணத்துத் தண்ணியை ஆத்து வெள்ளமா கொண்டு போயிடப் போறது?''

அவன் பேச்சு உள்ளே ஒரு தனி அறையில் முடங்கிக் கிடக்கும் வத்சலா காதுக்கும் - அவளை ஒட்டி அமர்ந்து கொண்டிருக்கும் சித்ரா காதுக்கும் கேட்கவும் இருவரும் ஒருவரை ஒருவர் அர்த்தத்தோடு பார்த்துக் கொண்டனர். சித்ரா முகத்தில் ஒரு புதிய தெம்பு ஓடத் தொடங்கியது.

''நீ அதிர்ஷ்டக்காரி சித்ரா... அதான் உன் விருப்பப்படியே இந்தக் கல்யாணம் நடக்கப்போறது.'' என்று வத்சலாகூட மெலிதான குரலில் சொல்லி கன்னத்தை வருடி திருஷ்டி கழித்தாள்.

''இந்தக் குடும்பம் எங்க உடைஞ்சு சிதறிடுமோன்னு நினைச்சேன். நல்லவேளை அந்த பகவான் காப்பாத்திட்டான்'' என்று திருஷ்டி கழித்த கைகளைக் கூப்பித் தொழுதாள்.

சித்ரா, வத்சலா அத்தையை ஒரு வினாடி ஊடுருவினாள். 'மங்களகரமாக பூவும் பொட்டுமாய் இருந்த அந்த அத்தை எங்கே? இப்பொழுது முட்டாக்கு போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்ட இந்த அத்தை எங்கே? இந்த நிலையிலும் புருஷன் போனாலும் பிள்ளை ஆசை நிறைவேறிய தற்காக சந்தோஷப்படுகிறாளே இவளல்லவா தாய்...?'

சித்ராவுக்குள் எண்ணத்தின் உணர்ச்சிப் பெருக்கில் கேள்விகள் பிறக்கும் சமயம் வெளியே இருந்து புதிதாக ஒரு கருத்து

இருவர் காதிலும் விழுந்தது.

''சீனு... உன் ராசிக்கு உனக்கு கல்யாணத்துக்கு பிறகுதான் யோகம் ஆரம்பம். ஆகையால கல்யாணத்தை தள்ளிப் போடாம சட்டுபுட்டுன்னு பண்ணிக்கற வழியைப்பார்.''

- எட்டிப் பார்த்தாள். ஜோசியர் மாமா தெரிந்தார். அவர்தான் பேசிக் கொண்டிருந்தார்.

''இவன் ஜாதகத்தை எப்பப் பார்த்தேள் நீங்கோ?''

- இது பாட்டி...

''அதைத்தான் அந்த நரசிம்மாச்சாரி முன்னாலேயே தந்துட்டாரே...''

''யாரு ஆடிட்டரா?''

''அவரேதான்...''

''ஜாதகமே பாக்கப்போறதில்லைன்னுல்ல என் பிள்ளை சொல்லிண்டிருந்தான்.''

''அது உங்களை எல்லாம் ஏமாத்த... ஆனா ஜாதகத்தை நரசிம்மன் பாத்துட்டார்...''

''இதுல எங்களை ஏமாத்த என்ன இருக்கு?''

''உம்ம பிள்ளை அவர் பொண்ணைக் கல்யாணம் பண்ணிண்டிருந்தா ஒரு வருஷத்துல வைகுண்ட பிராப்தியடைஞ்சிருப்பான். புரியலையன்னா தெளிவாவே சொல்றேன். அநியாயமா செத்துப் போயிருப்பான்.''

''அடக்கொடுமையே... இது தெரிஞ்சும் எப்படி என் பிள்ளை இதுக்கு ஒத்துண்டான்?''



''உங்க பிள்ளைக்குத் தெரியாதே. நானும் என் தெரியப்படுத்தக் கூடாதுன்னு அந்த வாயையும் தெச்சிப் போட்டுட்டார் நரசிம்மன்.

இப்ப நான் இதைச் சொல்றேன்னா காரணம் இருக்கு. ஒரு தப்புக்கு துணை போகப் போய்தான் உம்ம பிள்ளையை காவேரி கொண்டு போயிட்டா. நானும் தினம் அந்த ஆத்துல குளிக்கறவன். எனக்கு எதுவும் ஆயிடக் கூடாது பாருங்கோ. அதான் இப்போ உண்மையைச் சொல்லிட்டேன். அதுல ஒரு முக்கியமான விஷயம் என்னன்னா உங்க பிள்ளை சீனு ஜாதகத்துல ஆயுள் பலம் அதிகம். அதனாலதான் சீனுவுக்கு அந்தப் பொண்ணோட கல்யாணம் குதிரலை.

இப்பவும் ஒரு விஷயம் சொல்றேன். உம்ம பிள்ளை ஜாதகப்படி இன்னும் பதினைஞ்சு நாள்ல கல்யாணம் நடக்கணும். அப்படி நடக்கலைன்னா எல்லாமே கெட்டுப் போயிடும். குரு அதுக்குப் பிறகு சனி செவ்வாயோட சேருவதால வேற மாதிரி பிரச்சினைகள் வரும். ஜாக்கிரதை...''

அவர் பேச்சு சீனுவை எந்த வகையிலும் பாதித்த மாதிரித் தெரியவில்லை.

அலட்சியமாக அவரைப் பார்த்தான்.

''என்ன... நான் சொல்றத நம்ப முடியலையா?''

''ஆமாம். கல்யாணம் பண்ணிக்க போறவன் நான். அதுலையும் சித்ராதான் என் பொண்டாட்டிங்கறதுல எனக்கு எந்த விதத்திலும் மாற்றமும் இல்லை. அவ

கழுத்துல நான் தாலியத்தான் கட்டலையே தவிர மற்றபடி இந்த நிமிஷம் அவளை என் பொண்டாட்டியாதான் நினைக்கறேன். எங்களை உங்களோட பதினஞ்சு நாள் கணக்கோ இல்லை உங்களோட குருவோ இல்லை, சனி செவ்வாயோ ஒண்ணும் பண்ண முடியாது. அவா வேணும்னா என்னண்ட ஏமாந்து போவா. நீர் போய் வேலையப் பாரும்.''

தீர்க்கமாகப் பேசினான் சீனு. அதுவரையில் எதுவும் பேசாமல் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்த ராஜகோபாலன் சற்று கலக்கத்தோடு சீனுவைப் பார்த்தார்.

''சீனு... அவர் ஒண்ணும் தேங்கா மூடி ஜோசியர் இல்லை. அவர் பேச்சை கொஞ்சம் கேளு'' என்றார்.

''என்ன மாமா... உங்களுக்கும் என்மேல சந்தேகமா?''

''சந்தேகம் இல்லப்பா... கால நேரங்கள் சாதகமா இருக்கும் போதே காரியத்த முடிச்சுக்கணும்.''

''உண்மைதான். எனக்கு அது எப்ப சரியா இருக்கோ அப்ப நான் நிச்சயமா காரியத்த முடிச்சுப்பேன்.''

''அப்ப இப்ப கல்யாணம் வேண்டாங்கறே...''

''ஆமா... அப்பா காரியங்கள், ஊன மாஸ்யம் எல்லாம் முடியட்டும். இப்போதைக்கு என் குறி ஒரு நல்ல வேலை...''

சீனுவின் உறுதியிலும் ஒருவித நியாயம் இருக்கத்தான் செய்தது. ராஜகோபாலன்



வாயை மூடிக் கொண்டார். ஜோதிடர் மாமா எழுந்து கொண்டார். புறப்படும்முன் ராஜகோபாலனை வெளியே அழைத்தார். தனியே இருவரும் ஒதுங்கினார்கள்.

''என்ன மாமா...?''

''ஆமா... சடகோபன் சடலத்தை நீர் பாத்திரா?''

''இது என்ன கேள்வி? கூட இருந்து எரிச்சதே நான் தானே... ஆமா... எதுக்கு இந்த சந்தேகம்?''

''இல்ல. சீனு ஜாதகப்படி இப்ப கர்ம காரியம் பண்ண வாய்ப்பே இல்லை. அதான்...''

''என்ன மாமா சொல்றீர்...?''

''இதோ பாருங்கோ... நான் சடகோபன் ஜாதகத்தையும் பார்த்தவன்கற முறைல சொல்றேன். அவருக்கும் ஆயுள் பலம் அதிகம். இப்ப அவர் சாக வாய்ப்பே இல்லை. பிள்ளை ஜாதகத்துலையும் கர்மம் பண்ற சந்தர்ப்பம் இல்லை...''

''அப்படின்னா...?''

''ஒண்ணு சீனு ஜாதகம் பொய்யா இருக்கணும். இல்ல சடகோபன் உயிரோட இருக்கணும். இரண்டுல ஏதாவது ஒண்ணுதான் சாத்யம். சீனு ஜாதகம் உண்மைன்னா... எழுதிக்குங்கோ - பதினைஞ்சு நாள்ல கல்யாணம் நடக்கலைன்னா அவனுக்கு எப்பவுமே கல்யாணம் கிடையாது... வரேன்.''

- ஜோசியர் மாமா பொட்டில் அடித்த மாதிரி சொடக்கு போட்டு சொல்லிவிட்டு கிளம்பிப் போயே போய்விட்டார்.

ராஜகோபாலனுக்கு கிறுகிறுவென்று தலை சுற்றத் தொடங்கியது.

# 13

வீடு!

ஊஞ்சல் மேல் ராஜகோபாலன்.

முகத்தில் தீவிர சிந்தனை. அரிசியைப் பொறுக்கிக் கொண்டே வந்து ராஜகோபாலனைப் பார்த்த பூமா புரிந்து கொண்டாள்.

''என்ன... புதுசா எதானா குழப்பமா?''

''ஆமா... பதினைஞ்சு நாள்ல கல்யாணம் பண்ணணுமாம் - இல்லேன்னா சீனுவுக்கு எப்பவுமே கல்யாணம் நடக்காதாம்...''

''இது என்ன புது சிக்கல்... யார் சொன்னது? ஜோசியர் கிருஷ்ணமாச்சாரி மாமாவா...?''

''ஆமா...''

''அவர் எப்ப சீனு ஜாதகத்தை பார்த்தாராம்?''

''அது ஒரு பெரிய கூத்து... அந்த ஆடிட்டர் நரசிம்மன் பெரிய மாய்மால வேலை எல்லாம் பண்ணப் பார்த்திருக்கான். நரசிம்மன், மாப்ளைக்கே தெரியாமல் சீனு ஜாதகத்தை பார்த்திருக்கான். அப்படியே அந்த ஆளோட பொண்ணு ஜாதகத்தையும் பார்த்திருக்கான். அந்த பொண்ணு ஜாதகப்படி அவளுக்கும் சீனுக்கும் கல்யாணம் நடந்திருந்தா சீனு ஒரு வருஷத்துல செத்துப் போயிருப்பானாம்...''

''ரங்க... ரங்கா... இது தெரிஞ்சும் எப்படி அந்த நரசிம்மன் கல்யாணத்துக்கு



துடிச்சார்...?''

''அதுக்கு பின்னாலதான் சூட்சமம் இருக்கு. சீனு போகட்டும்னு நினைச்சாரா, இல்லை... இதுக்கு பயந்துண்டு கல்யாணம் பண்ணாம இருக்க முடியாதுன்னு நினைச்சாராங்கறதெல்லாம் கேட்க வேண்டிய கேள்வி - ஆனா அது இப்ப பிரச்சினை இல்ல. இப்ப பிரச்சினையே வேற...''

''என்ன?''

''சீனு ஜாதகத்தை அந்த பொண்ணுக்காக பாக்கப் போய் அதுல ஒரு உண்மை தெரிய வந்திருக்கு.''

''என்ன அது...? செத்த சுத்தி வளைக்காம சீக்கிரமா சொல்லுங்கோ!''

''அதான் சொன்னேனே... பதினைஞ்சு நாள்ல கல்யாணம் பண்ணிடணும்... அப்புறமா திசை மாற்றம் இருக்காம். இப்பவிட்டால் அப்புறம் கல்யாணம் பண்ண அவாள்ளாம் விட மாட்டாளாம்...''

''சரி... இதை நீங்க நம்பறேளா?''

''எவனாவது ஒரு ஒன்றையணா ஜோசியன் சொல்லியிருந்தா 'போடா' பைத்தியக்காரான்னு சொல்லிட்டுப் போயிடலாம். சொல்லியிருக்கறது ஜோதிட சாம்ராட் கிருஷ்ணமாச் சாரியாச்சே...''

''இது என்ன... கத்தி போய் வாலு வந்த கதையா?''

''இன்னும் ஒண்ணு இருக்கு. அதைக் கேட்டா நீ ஆடிப்போயிடுவே...''

''அது என்ன?''

''இந்த கல்யாணத்துக்கு பெரிய வில்லன் யார்?''

''செத்துப்போன உங்க மாப்ள.''

''அங்கதான் ஜோசியர் என்னை ஒரு பிடி பிடிச்சார்''

''என்ன... சட்டுன்னு சொல்லுங்கோ...''

''அவர் செத்திருக்க வாய்ப்பே இல்லைங்கறார்...''

- ராஜகோபாலன் சொன்ன விஷத்தைத் தொடர்ந்து சிலையாகி அவரை வெறித்தாள் பூமா.

''என்ன பூமா... நம்ப முடியலையா?''

''இதை எப்படி நம்ப முடியும்...? அவர் உடம்பைத்தான் கண்டுபிடிச்சு காரியமெல்லாம் முடிஞ்சிடுத்தே?''

''நானும் அந்த தைரியத்துலதான் இருக்கேன். ஆனா அவரோ இப்படிச் சொல்றார்...''

''அப்ப அவர் ஜோசியம் தப்புன்னு அர்த்தம். ஜோதிட சாம்ராட்டும் தப்பா சொல்வார்னு அர்த்தம். ஆகையால் இந்த 15 நாள் கெடுவைப் பத்தி கவலைப் படாம போய் வேலையப் பாருங்கோ.''

பூமா தீர்மானமாகவும் மிகுந்த நம்பிக்கையோடும் சொல்லிவிட்டு நகர்ந்து கொண்டாள்.

திரும்பவும் ஊஞ்சலில் சாய்ந்தார் ராஜகோபாலன். அது கிச்சு கிச்சு என்று அவர் மனசைப் போலவே ஆடத்தொடங்கியது.

## 14

வெளியே கிளம்பிக் கொண்டிருந்தார் நரசிம்மன். கார் அருகே டிரைவர் தயாராக



நின்று கொண்டிருந்தான். அவர் வந்து உள் ஏறவும் காரைக் கிளப்பினான். நடுவில் ஓடிவந்தாள் நாமகிரி.

''என்ன நாமகிரி...''

''இப்ப விஸ்வநாதபுரத்துக்குத்தானே போறேள்?''

''ஆமா... என்ன விஷயம்...?''

''அந்த தோப்பு விஷயமா விசாரிச்சுண்டு வந்துடுங்கோ.''

''பாக்கலாம்... நீ எட்றா காரை...''

''அப்படி சொல்ல வேண்டாம். காவேரிக்கரை ஓரமா உள்ள தோப்பு. போனா வராது...''

- நாமகிரி சொன்னதும்தான் தோப்பின் ஞாபகமே அவருக்குள்... கல்லணை நோக்கி காவேரி போகும் வழியில் இருக்கிறது. தென்னையும் மாமரமுமாய் கொழித்து வளர்ந்த அந்தத் தோப்பை யார் பார்த்தாலும் வைத்த விழியை எடுக்க முடியாது. அத்தனை பசுமை... அவ்வளவு ஊட்டம்.

மாமரமும் நல்ல சாதி மரங்கள்!

பந்து பந்தாய் காய்களைப் பார்க்க ஆசையாக இருக்கும். எல்லாம் நல்லமுத்துக் கவுண்டருக்கு சொந்தம். அவருக்கு இப்பொழுது 'என்ன பணக்கஷ்டமோ தோப்பை விற்றுவிடும் முடிவிற்கு வந்து விட்டார்!

'ஒரே தவணையில் இருபது லட்சத்தை எண்ணி வைப்பவர்களுக்குத்தான் தோப்பு. பேரம் பேசவோ, வில்லங்கம் பார்க்கிறேன் விவகாரம் இருக்கிறதா பார்க்கிறேன் என்று ஆரம்பித்தாலோ அவர்கள் சங்காத்தமே வேண்டாம்' என்பதுதான் அவரது

நிபந்தனை.

கார் பறந்து கொண்டிருக்க நரசிம்மன், கவுண்டரின் நிபந்தனையையும் ஒரு க்ஷணம் நினைத்துப் பார்க்கிறார். இத்தனைக்கும் கவுண்டருக்கு ஆடிட்டரே நரசிம்மன் தான்...

என்ன செய்யலாம்...?

பேசாமல் வாங்கிப் போட்டு விடலாமா?

பணமாக இருந்தால் இன்றைய நிலையில் 8% 10% என்று அல்ப வட்டியாகத்தான் தருகிறது பேங்க். மீறி எதாவது ஃபைனான்ஸில் போடலாம் என்றால் தூக்கிக் கொண்டு ஓரே ஓட்டமாக ஓடிவிடுவார்கள் அந்த நாய்கள்.

சேமிக்கவே வழி இல்லை. ஒன்று தங்கத்தில் போட வேண்டும். இல்லையேல் நிலத்தில் போட வேண்டும். தங்கத்தில் போடுவதுகூட ஸ்லாக்யம் இல்லை. திருட்டு நாய்கள் ஒரு நாள் லாக்கரை உடைத்து அபேஸ் செய்து கொண்டு போய்விடக் கூடும்.

நிலத்தில் போடுவதுதான் இப்போதைக்கு சரி...

எப்படியும் ரேவதி கல்யாணச் செலவுக்கென்று எடுத்து வைத்த பத்து இலட்சம் இருக்கிறது. சொச்சம் ஒரு பத்து லட்சம்தான். போட்டுப் புரட்டி வாங்கிவிட வேண்டியதுதான்.

கல்யாணம்தான் குதிரவில்லை.

தோப்பாவது குதிரட்டுமே...

கார் ஓடும்போது சிந்தனையும் ஓடியது.

''டேய்... காரை கவுண்டர் தோப்புக்கு விடு...'' என்றார் அடுத்த க்ஷணம்.

காரும் அதற்கேற்ப திசை திரும்பத்



தொடங்கியது. வழி எங்கும் வைக்கோல் பிரிகள். நெல்லடிப்புகள். எல்லாம் காவேரியின் கருணை. கரையோரமாக ஒரு புல்கூட துரையாட்டம் நிமிர்ந்து வளர்ந்திருக்கிறது. அத்தனை செழிப்பு.

இப்படி ஒரு இடத்தில் தோப்பு வாங்கிப் போடுவதும் நல்லதுக்குத்தான் என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே எதிரில் சீனு பைக்கில் வந்து கொண்டிருந்தான்.

ஒரு க்ஷணம் கல்யாணத்தை நிறுத்தி 'உம்ம பொண்ணே வேண்டாம்' என்று அவன் சொன்னது உடனே ஞாபகமாக ஞாபகத்தில் சிலிர்த்தெழுந்தது.

கூடவே ராஜகோபாலன் வந்து ஐந்தாயிரத்தை விட்டெறிந்து சொக்கரித்து விட்டுப்போனது என்று எல்லாமே வரிசையில் வர ஆரம்பித்தன.

ஸ்ரீசூரண நெற்றியில் வரி ரேகைகள் விழுந்து அந்த பிராமணரை க்ஷத்திரியனாக மாற்றப்பார்த்தன. காரிடம் நல்ல வேகம்.

கிட்டத்தட்ட பதினைந்து மைல் தொலைவை அது பத்து நிமிஷத்தில் கடந்து கவுண்டரின் தோட்டத்துக்குள் நுழைந்தது. உள்ளே தோப்புக் காவல்காரன் நாச்சிமுத்து இருந்தான்.

நரசிம்மன் கார் உள் நுழைவதைப் பார்த்துவிட்டு ஓடி வந்தான்.

''வாங்க சாமி வாங்க... வாங்க...'' என்று பெரிதாகக் கும்பிடு போட்டான்.

''என்னய்யா... எப்படி இருக்கே?''

''நல்லா இருக்கேங்க...''

''அப்புறம்... இந்த வருஷம் எப்படி விளைச்சல்?''

''அதுக்கென்னங்க அமோகம்தான்... ஆனா கவுண்டர்தான் வித்துப்புடணும் வித்துப்புடணும்கறார்...''

''அதுக்குத்தான் நானும் வந்திருக்கேன். வா. கொஞ்சம் மொத்தத் தோப்பையும் சுத்திக்காட்டு...''

''சாமி, வாங்கப் போறீங்களாக்கும்...?''

''ஏன் வாங்கக்கூடாதா...?''

''அய்யோ தாராளமா வாங்குங்க. ஆனா என்னை மட்டும் அனுப்பிடாதீங்க...'' என்றபடியே தோப்பை சுற்றி வரத் தொடங்கினான். அவரும் உடன் நடந்தார். ஒரு இடத்தில் ஒருவன் தென்னை மட்டை மேல் படுத்திருந்தான். நரசிம்மன் வருவது தெரிந்தும் எழுந்திருக்காமல் படுத்தபடியே இருந்தான்.

''யாருய்யா அது... வேலை நேரத்துல படுத்துத் தூங்கிட்டு.''

''யார்னே தெரியலீங்க. பதினைஞ்சு நாளைக்கும் மேல ஆச்சு. நம்ம ஆத்தோரத்து புதர்ல கிடந்தான். ஆத்துல அடிச்சுக்கிட்டு வந்துட்டதா நினைச்சோம். ஆனா கழுத்து, தோள்பட்டைல எல்லாம் பூசினமாதிரி காயம். கண்ணு திறக்கவே ஒரு முழுநாள் ஆச்சு. கண்ணு முழிச்சும் பிரயோஜனம் இல்ல. புத்தி பேதலிச்சுடுச்சு போல... யார்னு கேட்டா சொல்லத் தெரியல. வெளியேயும் போகமாட்டேங்கறான். இப்படித்தான் இங்க நான் கொடுக்கறத தின்னுட்டு சுருண்டு சுருண்டு படுத்துக்கிடக்கான்...''

- அவன் சொல்லும்போதே நரசிம்மன் அந்த மனிதனை சமீபித்து விட்டார். குனிந்து பார்க்கவும் குப்பென்று



வியர்த்தது.

அது சடகோபன்...!

''சடகோபன்...'' நரசிம்மனும் விதிர்த்துப் போய் கத்தினார்.

''சாமி... உங்களுக்கு இவரைத் தெரியுங்களா?''

''தெரியுங்களாவா... இவர் என் சம்பந்தியா வந்திருக்க வேண்டியவர்யா...''

''அப்படியா... நானும் போற வர்றவங்ககிட்டல்லாம் காட்டி கேட்டேன். உடம்புல பூணூல் இல்லாததால் அய்யமாரா வேற நினைக்க முடியல.''

''என்னய்யா இப்படி பண்ணிப்புட்டே. இந்த ஆள் செத்துட்டதா நினைச்சு இவர் மகன் ஸ்ரீரங்கத்துல காரியமே பண்ணி முடிச்சிட்டான். நாராயணா... என்ன ஒரு மிராக்கிள்...?'' - நரசிம்மன் பதட்டம் பரவசம் என்கிற எல்லா கலவையுமானார்.

''அப்புறம் என்னங்க... முதல்ல கூட்டிக்கிட்டு போய் சொந்தக்காரங்க கிட்டே சேருங்க். யோகக்கார ஆள்தான் இவர். நல்லவேளை நீங்க வந்து பார்த்திங்க. இல்லாட்டி இங்கேயே சுருண்டு சுருண்டு படுத்துக் கிட்டிருந்து வாழ்க்கையே வீணாப் போயிருக்கும்...''

''சடகோபன்... ஏய்... என்னய்யா பாக்கறீர். என்னத் தெரியலை?'' - நரசிம்மன், மலங்க மலங்கப் பார்க்கும் அவரிடம் கேட்க அவர் முழிக்கிறார்.

''என்னய்யா... இதே காவேரில எத்தனை

ஆயிரம் தடவை குளிச்சிருப்பீர்? அதுல போயா இப்படி ஆயிட்டீர்? நம்ப முடியலையே...!''

''என்ன சாமி சொல்றீங்க... இவருக்கு நீச்சல் தெரியுமா?''

''ஸ்ரீரங்கத்து பிராமணன் யாருக்குய்யா நீச்சல் தெரியாது. அதையும் மீறி இவர் அடிச்சுக்கிட்டு போயிருக்கார்னா என்னத்த சொல்றது?''

''அதானே சாமி காவேரி... யானை யையே புரட்டிப் போடறவளாச்சே அவ...''

''சரி சரி... இனியும் பேசிக்கிட்டு நிக்கறதுல பிரயோஜனமில்ல. நான் இவரைக் கூட்டிக் கிட்டுப் போறேன். முதல்ல டாக்டர்கிட்ட காட்றேன். அப்புறம்தான் மத்த பேச்சே...''

- நரசிம்மன் துரிதமாக செயல்படத் தொடங்கினார். ஒரு அழுக்கு வேட்டி யோடு நின்ற சடகோபனைக் காரில் ஏற்றிக் கொண்டார். அது திரும்பி ஓடத் தொடங்கியது.

இந்த வாழ்க்கைதான் எத்தனை திருப்பங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது...?

முடிந்துவிட்டதில்கூட ஒரு ஆரம்பம் இருக்கிறதே... இது எதில் போய் முடியும்?

## 15

**கிழவி காவேரிக்கு கிளம்பிக் கொண்டி**ருந்தாள். அம்பாரமாய்



கட்டிக் கொண்டு ஒரு சோப்புத்துண்டையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டவளை வீடு கூட்டியபடி இருக்கும் சித்ரா பார்க்கிறாள். கேட்கிறாள்.

''எங்க பாட்டி... காவேரிக்கா?''

''ஆமாம். நீயும் வரியா...?''

''ஆத்து காரியம் முடிஞ்சிடுத்து. நானும் வரேன்...''

இருவருமாகக் கிளம்பினார்கள். இருட்டு அறைக்குள் இருந்து வத்சலா ஜன்னல் வழியாகப் பார்த்தாள்.

வாசலிலும் பைக் சப்தம்

எங்கோ போய்விட்டு வந்திருந்தான் சீனு...

பாட்டியும் சித்ராவும் காவேரிக்குப் போவதைப் பார்த்துக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

அவர்கள் வீதியில் இறங்கியிருந்தார்கள்.

சித்ரா மௌனமாக உடன் நடந்தாள். ஆனால் வீதியில்தான் சில கேள்விகள்.

''என்ன மாமி காவேரிக்கா?''

''ஆமா... இப்படி துணி மூட்டையோட நான் என்ன உறையூருக்கா போவேன்...''

''எப்படி மாமி மனசு வரது?''

''எதுக்கு?''

''உங்க பிள்ளையையே கொண்டுண்டு போயிட்ட காவேரியைக் கொஞ்ச நாளைக்குத்தான் தூரவெச்சா என்ன?''

- நியாயமான கேள்விதான். பாட்டி அவர்களுக்கு பதில் சொல்லவில்லை. ஆனால் சித்ரா அதே கேள்வியை வேறு விதமாகக் கேட்டாள்.

என்றாள்.

''இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு? சடகோபன் என் பிள்ளையா இருக்கலாம். ஆனா அவன் ஒரு சின்ன அசுரன்னா'' - பாட்டி அதிர்ச்சியளித்தாள். சித்ரா பாட்டியை அதிசயமாகப் பார்த்தாள்.

''அவனுக்கு எப்பவுமே அவனோட தீர்மானம்தான் பெருசு. பள்ளிக்கூடத்துலயும் சரி, காலேஜ்லயும் சரி, கல்யாண வாழ்க்கையிலும் சரி யார் பேச்ச என்னிக்குக் கேட்டுருக்கான்...''

''அதனால?''

''அவன் ஒரு கம்சன் சித்ரா. உங்க விஷயத்துல எங்க அவன் ஜெயிச்சுடு வானோன்னு நினைச்சேன், நல்ல வேளை காவேரி 'நான் இருக்கேன்'னு காப்பாத்திட்டா. மனுஷா பொறுத்துப்பா. தெய்வம் பொறுத்துக்குமா?'' - பாட்டி அதிசயமாகத்தான் தெரியத் தொடங்கினாள். இப்படிக்கூட ஒருத்தி நியாயம் பேசமுடியுமா என்ன? சித்ராவுக்கு பிரமிப்பாக இருந்தது.

''என் வரைல இவ ஒரு தர்மதேவதை... அவள்ல மூழ்கி எழ கொடுத்து வெச்சுருக்கணும்.''

''உங்க பதில் ரொம்ப ஆச்சரியத்த தருது. பிள்ளைன்னு கூடப் பாக்காம நீங்க பேசற நியாயம் சிலிர்ப்பா இருக்கு எனக்கு...''

''அது சரி... நான் ஒண்ணு உன்னைக் கேட்கவா?''

''என்ன பாட்டி...''

''சீனு கல்யாணத்தை இப்படி தள்ளிப் போட்டுட்டாளே - வருத்தமில்லையா உனக்கு?''



''இதுல வருத்தப்பட என்ன இருக்கு பாட்டி. அவர் சொல்றதும் நியாயம்தானே?''

''அவன் ஜாதகப்படி சீக்கிரமா கல்யாணம் நடக்கலைன்னா அப்புறமா எப்பவுமே கல்யாணம் இல்லேன்னு ஜோசியர் சொல்லியிருக்காரே - அதப்பத்தி என்ன நினைக்கறே?''

''அவர் என்ன நினைக்கறாரோ - அதுதான் என் நினைப்பும்கூட...''

''அவன்தான் இதை எல்லாம் பெரிசாவே எடுத்துக்கலையே...''

''அப்ப நானும் எடுத்துக்க விரும்பல...''

''அப்படி இருந்துடாதே சித்ரா. கைக்கு எட்டினது எட்டாமப் போய்டப்போறது. ஜாதகம் ஜோசியம்லாம் நாம நினைக்கற மாதிரி இல்லை. அது என்ன நினைக்கறதோ அதுக்குத் தகுந்த மாதிரிதான் நாம நினைப்போம்.''

''அப்படின்னா சீக்கிரம் கல்யாணம் நடக்கலைன்னா நானும் அவரும் ஒண்ணு சேர முடியாது - பிரச்சினை வருங்கறேளா?''

''எனக்கு என்னமோ அப்படித்தான் தோன்றது...''

''நாங்க உறுதியா இருக்கோம் - நீங்களும் எங்க பக்கம் இருக்கேள். அது எப்படி வர முடியும்?''

''அதுக்கு பேர்தான் வாழ்க்கை. வாழ்க்கையைப் போல ஒரு தேர்ந்த மர்மநாவல் இருக்க முடியாது. அடுத்த நொடி என்ன நடக்கும்னு யாராலையும்

சொல்ல முடியாததுதான் வாழ்க்கை.

கொஞ்சம் கவனிச்சுப் பார்... ராஜீவ் காந்தியையே எடுத்துக்கோ. அவர்தான் அடுத்த பிரதமர்னு எல்லாரும் நினைச்சோம். ஆனா அநியாயமா செத்துவெச்சு கூடைல அள்ளும் படியாச்சு.

நரசிம்மராவை எடுத்துக்கோ... அந்த வயசுல அவர் பிரதமர் பொறுப்பை நினைச்சுப் பார்த்திருப்பாரா? அது தேடிப்போய் அவர்வீட்டுக் கதவைத் தட்டலையா...''

பாட்டி உலக ஞானம் காட்டினாள். வாழ்க்கையின் போக்கை இதைவிட எளிமையாகப் புரியவைக்க முடியுமா என்கிற சந்தேகம் தோன்றுமளவு.

சித்ரா அயர்ந்துபோய் விட்டாள்.

''உங்களுக்கு எதுவும் தெரியாது... அடுப்படி பூனை - ஆசார சன்யாசின்னு நினைச்சிண்டிருந்தேன். பல உலக விஷயம் பேசறேளே...''

பாட்டி அதற்கு பதில் சொல்லவில்லை. ஒரு மெல்லிய புன்முறுவல் மட்டும் பூத்தாள். அதற்குள் காவேரி வந்து விட்டது.

எப்பொழுது பார்த்தாலும் அலுக்காதது இரண்டு என்பார்கள். ஒன்று ரயில் - இன்னொன்று யானை. தயவுசெய்து மூன்றாவதாக அத்தோடு காவேரியையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்கிற மாதிரி அகண்ட நீர் உடம்போடு புரண்டு போய்க் கொண்டிருந்தாள் அவள். அங்கங்கே நுரைத்தலையணை. சங்கு சக்கரம்போல சுழல் வேறு...



கரையோரமாக ஒரு கூட்டமே அழுக்கு போக்கிக் கொண்டிருந்தது. காவேரியும், 'எத்தனை லட்சம் பேர் வந்தாலும் என்னை அழுக்காக்க முடியாது' என்கிறாற் போல திமிருடன் ஓடுவதாகவே தோன்றியது. பாட்டியும் சித்ராவும் சரியான இடம் தேடத் தொடங்கினார்கள். இது ஒரு அவஸ்தை.

நல்ல கல் அகப்பட வேண்டும்.

சுற்றிலும் திருட்டு மனிதர்கள் இருக்கக் கூடாது. கழட்டிவைப்பதைத் திருடுபவர்களைக்கூட மன்னித்து விடலாம். ஆடையைக் கழட்டும்போது ஓரப்பார்வை பார்ப்பவர்களை என்ன செய்வது?

அதிலும் ஈரத்தோடு ஒட்டிப்படர்ந்து உடம்பின் லாவண்யங்களைப் பாதி மறைத்தும் மீதி மறைக்காமலும் காட்டும்போது குளிக்கும் நீரையும் மீறி சூடாவதெல்லாம் பலருக்கு தனி சுகமான விஷயம்.

பாவம் போக குளிக்கும்போதே பாவம் பண்ணுவது என்பது அவர்கள் கொள்கை.

கேட்டால் இங்கே நடந்து கொள்வதற்கும் சேர்த்து கடைசியாய் ஒரு முழுக்கு... அவ்வளவுதான்.

'காவேரி மன்னிச்சாச்சு' என்று கண் சிமிட்டும் அவர்களில் ஒரு விடலை சித்ராவை தண்ணீருக்குள் இருந்தபடி வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

உள் பாவாடையை மார்புக்குமேல் ஏற்றிக்கட்டிக் கொண்டுவிட்டு மற்றதை கழட்டி எறியும்போது ஒரு பார்வை. பின் நீருக்குள் அமுங்கி எழுகையில் ஒட்டிக் கொண்ட அந்த ஈரஉடம்பின் மேல்

விழுங்கும்படியாக இன்னொரு பார்வை.

பாட்டி பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

சரேலென்று தண்ணீருக்குள் பாய்ந்தாள்.

அவன் முற்றிலும் எதிர்பாராதபடி அவனை எகிறிப்பிடித்தாள். அப்படியே நீரில் போட்டு அமுக்கத் தொடங்கினாள். அவன் திண்டாடிப் போனான். மூச்சுத் திணறலெடுக்க துள்ளிப் புரண்டான்.

''படவா நாயே... உன் கண்ணை நோண்ட! குளிக்க வரேளா இல்ல ஜல்சா பண்ணவா?''

- பாட்டி கோபத்தோடு கொப்பளித்தாள். ஒரு வழியாக அவன் - தப்பித்தால் போதும் என்று ஓடத் தொடங்கினான்.

சித்ரா விக்கித்துப் போய் விட்டாள்!

பாட்டியிடம் இப்படி ஒரு விஸ்வ ரூபத்தை அவள் இதுவரையில் பார்த்ததில்லை.

பேச்சே வரவில்லை. சுற்றி இருப்பவர்கள்கூட அசந்து போனார்கள்.

''பாட்டி நல்லா போட்டீங்க... இந்த வயசுலையும் உங்க தைரியத்தை நினைச்சா...'' என்று வியந்தார்கள்.

பாட்டி சட்டையே செய்யாமல் தண்ணீரில் முழுக்குப் போடும்போது சுப்பு அங்கே புயற்காற்றாக நுழைந்து கொண்டிருந்தான்.

''பாட்டி... பாட்டி...'' என்கிற குரலும் தேடலுமாக கரையை எட்டியவன் பெருமூச்சோடு அவர்கள் முற்றிலும் எதிர்பார்க்காத சேதியைச் சொன்னான்.

''பாட்டி... உங்க பிள்ளை சாகலை. பெரியப்பா சாகலை, உசுரோடதான் இருக்கார். டாக்டர் நரசிம்மன் அவரைக்



கண்டுபிடிச்சு கூட்டிண்டு வந்துருக்கார். தகவல் சொல்லத்தான் ஓடி வந்தேன்.''

- அவன் மூச்சிரைத்தான். ஆனால் பாட்டியும் சித்ராவும் அகண்ட விழிகளானார்கள்.

கொஞ்சம் முந்திதானே சொன்னாள் பாட்டி... வாழ்க்கை ஒரு தேர்ந்த மர்ம நாவலை விடவும் அதிக மர்மமானது என்று.

அதுதான் எவ்வளவு உண்மை!

---

# 16

---

சீரம் சொட்டச் சொட்ட உள்ளே நுழைந்தபோது ஊஞ்சலில் நரசிம்மன் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

பக்கமாக சற்றுத் தள்ளி அவசர கோலத்தில் இட்டுக் கொண்ட குங்குமத்தோடும், கொத்துப் பூவோடும் நின்று கொண்டிருந்தாள் வத்சலா. நிறைய அழுது முடித்திருந்தாள்...

எல்லோரும் பாட்டிக்காக காத்துக் கொண்டிருக்கின்றாற்போல் தோன்றியது. பாட்டி பரவசமான பரவசத்தோடு பார்த்தாள்.-நிறைய படபடத்தாள்.

''வாங்கோ...'' - நரசிம்மன் அவள் வீட்டில் அவளை வரவேற்றார். வாசல், ரேழி, கூடம் எல்லா இடங்களிலும் அக்கம் பக்கம் உறவுகள்.

'எங்கே சீனு?'

பாட்டி பார்வை எல்லோரையும் பார்த்து ஒரு வட்டமடித்து விட்டு நரசிம்மனை

அடைகிறது.

''கேள்விப்பட்டிருப்பேளே...''

''உம்''

''சந்தோஷப்படாம... இப்படி கல்லாட்டம் நின்னா என்ன அர்த்தம்.''

''அதுக்கென்ன... குதிக்கணுமா இல்ல கூத்தாடணுமா? ஆமா... எங்க சடகோபன்?''

''ஆஸ்பத்திரியில இருக்கார்...''

''அங்க...?''

''காரணமாத்தான். உடம்புல கொஞ்சம் காயம். மத்தபடி ஒரு குறையுமில்ல.''

''எங்க பார்த்தேள் அவனை...?''

''எங்கையோ பார்த்தேன் - அதுவா இப்ப முக்கியம்? உசுரோட பாதுகாப்பா இருக்கார். அதுன்னா முக்கியம். அப்படியே என்னைப் பாத்த நிமிஷம் கட்டிப் புடிச்சுண்டு அழுதார். கல்யாணத்தை பத்தியும் கேட்டார். யார் பொணத்தையோ எடுத்து எரிச்சு காரியத்தையும் பண்ணின கர்மத்த சொன்னேன். தலையில அடிச்சிண்டார்'' - நரசிம்மன் எங்கு வரவேண்டுமோ அங்கு வந்தார் - அனேக பொய்களோடு.

''இப்ப நாங்க அவனைப் பார்க்கணும். எந்த ஆஸ்பத்திரியில இருக்கான்?''

''உங்களை எல்லாம் கூட்டிண்டு போகத்தானே வந்துருக்கேன். கிளம்புங்கோ போகலாம்.''

- துண்டை உதறிக் கொண்டு எழுந்தார்.

''ஆமா... எங்க சீனு?''

''ஏதோ விஷயமா வெளியே போனான். எங்கன்னு தெரியல.''

''அவர் வந்தவுடனே கூட்டிண்டு



வாங்கோ. இப்ப நாம கிளம்பலாம்.''

- நரசிம்மன் சரத்தலையும் மருண்ட விழியுமாய் நிற்கும் சித்ராவைப் பார்த்த படியே சொன்னார்.

அந்தப் பார்வை அவளை ஊசியாய்க் குத்திற்று.

அப்படியே அது ராஜகோபாலனைத் தேடிற்று...

அப்பொழுதுதான் சேதி அறிந்து ராஜகோபாலன் அரக்க பரக்க அந்த வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார்.

மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கிற்று.

''வத்சலா... மாப்ளை... என்னென்னமோ கேள்விப்பட்டேனே'' என்று உதடு தந்தியடித்தது.

''என்னென்னமோ என்ன... என்னென்னமோ... நல்லதைத்தான் கேள்விப்பட்டிருக்கேள். உசுரோட இருக்கிறவரை பார்க்கத்தான் போயிண்டிருக்கோம்...'' என்றபடி நரசிம்மன் காரில் ஏற, பாட்டியும் வத்சலாவும் பின்னால் ஏற, ராஜகோபாலனும் ஏறிக் கொள்ளப் பார்த்தார்.

''யோவ் எறங்குமய்யா...'' - நரசிம்மன் துளிகூட அயராமல் அவரைக் கத்தரித்தார். ராஜகோபாலனுக்கு என்னவோ போலாயிற்று!

''இது என் க்ரர்... இதுல யார் ஏறணும்னு ஒரு கணக்கு இருக்கு.''

- வார்த்தைகள் கரிக்கங்குகளாய்த் தெறித்து விழுந்தன. காரும் ஆவேசமாகப் புறப்பட்டது.

சித்ரா பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்பாவை பின்னர் சமீபித்தாள். பின் உள் அழைத்துச் சென்றான். நெடுநேரம் மௌனமாக எதுவும் பேசாமல் நின்றாள்.

என்ன பேச...?

எதைப் பேச...?

அந்த ஜோசியக்காரர் சொன்னது உண்மையாகி விட்டது.

அவர் சொன்னதைப் போலவே பதினைந்து நாள் கெடு என்பதும் உண்மையாகி விடும்போல் உள்ளது...

அடுத்து என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ?

ராஜகோபாலன் ஒரு தீர்மானத்திற்கு வந்தது போல எழுந்தார்.

''சித்ரா புறப்படு...''

''எங்கப்பா...?''

''நம்ம வீட்டுக்குத்தான்:''

''அப்பா...''

''புறப்படு... இனி எதுவும் நம்ம கைல இல்ல. எல்லாம் பழையபடி மாறியாச்சு. காவேரி கருணை செஞ்சுட்டதா நினைச்சேன். அவ கண்ணாமூச்சி விளையாடியிருக்கா. கிளம்பு... கிளம்பு...''

- சித்ரா கண்ணீர் பெருக அவரைப் பார்த்தாள்.

''எதுக்கும் அத்தான் வந்த பின்னே...!''

''அத்தானாவது, பொத்தானாவது... அதான் சைத்தான் ஒண்ணு திரும்ப வந்துடுத்தே. இனி எதுவும் உருப்படாது. அந்த ஆடிட்டர் பேசினது காதுல விழுந்ததா.?''

''விழுந்ததுப்பா...''



''இன்னுமா உனக்கு நம்பிக்கை இருக்கு...?''

''அத்தான் வந்துடட்டுமேப்பா...''

''சொன்னா கேளு... எனக்குத் தெரியும் - இந்தக் கல்யாணம் நடக்கப் போறதில்லைன்னு. அதனால பாதகமில்லை. நீயும் நானும் இன்னைக்கே மெட்ராஸ் போறோம்...''

''மெட்ராஸ்க்கா...?''

''ஆமாம். நீ அந்த டைரக்டர் படத்துல நடிக்கப் போறே. நமக்கு இனி இந்த ஊர் வேண்டாம். ஒரு உறவும் வேண்டாம்.''

''அப்பா...! நீங்க கோபத்துல பேசறேள். அம்மா என்ன சொல்வான்னு யோசிச்சுப்பாத்தேளா...?''

''அவ நம்ம கூட வந்தா வரட்டும். இல்லேன்ன இந்த ஊர்லயே இருந்து சாகட்டும்.''

''வேண்டாம்ப்பா... சொன்னாக் கேளுங்கோ.''

''என் பேச்ச நீ கேள். இல்ல நான் பட்ட அவமானத்துக்கு நான் காவேரில இறங்கி உசுரை விடுறதைத் தவிர - எனக்கு வேற வழியில்லை...''

- ராஜகோபாலனை அதற்கு மேல் அவள் கத்த விடத் தயாராக இல்லை. கிளம்பக் காலெடுத்தாள். எதிரில் பரபரப்பாக சீனு நுழைந்து கொண்டிருந்தான். செய்தியறிந்த பதட்டம் முகத்தில்...

''ஆமா.... எங்க எல்லாரும்?''

''ஆஸ்பத்திரிக்கு உங்க அப்பாவைப் பார்க்கப் போயிருக்கா.''

''எப்படி... எப்படி மாமா... என்னால நம்ப முடியல.''

''அதை ஆஸ்பத்திரிக்கு போய் பார்த்துட்டா தெரிஞ்சு போயிடறது...''

''இல்ல... நான் பாக்க மாட்டேன் அவரை. என் வரையில் அவர் செத்தவர்தான்...''

''சீனு... இதென்ன பேச்சு? உங்கப்பா பொழைச்செழுந்து வந்துருக்கார். பாக்கலேன்னா அப்பா இல்லேன்னு ஆயிடுமா. போ... பாரு... அவர் என்ன சொல்றாரோ அதே மாதிரி நடந்துக்கோ. நாங்க கிளம்பறோம்.''

''என்ன மாமா பேச்சே ஒரு மாதிரி இருக்கு''

''......''

''ஏன் பேசமாட்டேங்கறேள்? அப்பா உசுரோட வந்துட்டதால திரும்ப நான் மாறிடுவேன்னு நினைக்கறேளா?''

''......''

''இனி ஒரு மாற்றம் எனக்கு எதாலையும் வராது மாமா. அப்பாவும் எதுவும் சொல்ல மாட்டார். நீங்க கவலைப்படாதேள்...''

''அது எப்படி சீனு... ஏற்கனவே உங்கப்பா புலி. இப்ப உசுரு பொழச்சு வந்துருக்கிற புலி. அடிபட்ட புலி. சும்மா இருப்பாரா...?''

''இருப்பார். இல்லேன்னா அதை எப்படி சமாளிக்கறதுன்னு எனக்குத் தெரியும். நீங்க பேசாம இருங்கோ''

- சீனு வைராக்யத்தோடு பேசினான்.

''வாங்கோ. அவரைச் சேர்ந்தே போய் பார்ப்போம்.'' என்று அவரை தோளில் கை போட்டு இழுத்தான். மலங்க மலங்கப் பார்த்துவிட்டு அவர் கிளம்பினார்.



# 17

ஆஸ்பத்திரி.

ஏதோ தொற்று நோயாளியைப் பாதுகாப்பாக சந்திக்கப்போகின்ற மாதிரி ஒவ்வொருவராகப் போய் பார்த்து விட்டுவர படுக்கையில் நல்ல மயக்கத்தில் இருந்தார் சடகோபன்.

டாக்டர், நரசிம்மனிடம் ரகசியமாக சொல்லிக் கொண்டிருந்தார்.

''ஏதோ நடக்கக் கூடாத ஒண்ணு நடந்துருக்கு. அது தண்ணில அகப்பட்ட சம்பவமாவும் இருக்கலாம். வேற ஒண்ணாவும் இருக்கலாம். ஸ்லைட் ஷாக் ட்ரீட்மெண்ட்டோட சில இஞ்ஜக்ஷன்ஸ் கொடுத்துருக்கோம். ரொம்பவும் மைனரான ஒண்ணா இருந்தா கண்முழிக்கும் போதே தெரிஞ்சிடும். இல்லேன்னா காலப் போக்குலதான் சரி பண்ண முடியும்.''

''எது எப்படி இருந்தாலும் அவருக்கு இங்க வரும் போதே சித்த பிரமைங்கறது யாருக்கும் தெரியக் கூடாது டாக்டர். கல்யாண விஷயத்துல பையன் பல்டி அடிச்சுட்டது தெரிஞ்சு அதிர்ச்சியில இப்படி ஆயிட்டார்னுதான் நீங்க சொல்லணும். அது சரியாகணும்னா அவர் விருப்பப்படி கல்யாணம் நடக்கணும்னு மட்டும் சொல்லுங்கோ...''

''நான் சொல்றது இருக்கட்டும். இப்படி உங்க பொண்ணு மேல விருப்பம் இல்லாத பையனுக்கு நீர் உம்ம பொண்ண கொடுக்கத்தான் வேணுமா? உம்ம

அந்தஸ்துக்கும் செல்வாக்குக்கும், வேற மாப்ளையா கிடைக்க மாட்டான்?''

''நிச்சயம் கிடைப்பான் டாக்டர். நானும் இனி என் பொண்ணை இந்த சடகோபன் பிள்ளைக்கு தரவும் போறதில்லை. ஆனா அந்த சமையக்காரன் என்கிட்ட நடந்துண்ட விதத்துக்கு அவனை சும்மா விடக்கூடாது. அதே போல மாப்ளப் பையனும் அப்பா இறந்துட்டதா நினைச்சிண்டு என்னை ரொம்ப எடுத்தெறிஞ்சு பேசி அவமானப்படுத்திட்டான்.

என் சொந்தக்காரா அவ்வளவு பேரும் நிச்சயதார்த்தத்துக்கு கிளம்பி அப்புறமா இந்த சம்பவத்தால நின்னா.

இதுக்கெல்லாம் இவா பதில் சொல்ல வேண்டாமா?''

''எனக்கென்னமோ இதெல்லாம் சரியாப்படலை. பெரிய மனுஷத்தனமாவும் எனக்குத் தோணலை. யோசிச்சு நடந்துக்குங்கோ...''

''சும்மா கொஞ்ச நாளைக்கு கண்ணாமூச்சி ஆடுவோம்கறேன். அந்த பையன் இதுதான் சாக்குன்னு என் கால்ல விழட்டும். அப்பாக்கு சரியாகணும்னா என் கால்ல விழுந்துதானே தீரணும். கால்ல விழட்டும் விட்டுடுறேன்.''

- நரசிம்மன் மூக்குக் கண்ணாடியைத் துடைத்தபடி சொன்னதை அரை மனதாகக் கேட்டுக் கொண்டு வெளியே வந்தார் டாக்டர்.

எல்லோரும் நின்று கொண்டிருக்க, சீனுவும் ராஜகோபாலனும்கூட வந்து சேர்ந்திருக்க; அவர் நரசிம்மன் சொன்னதைப் போலவே சொல்லத் தொடங்கினார். பணமும் பழக்கமும்தான்



எதையும் செய்யுமே...

''இங்க வரும்போது உடம்புலதான் லேசா காயம் இருந்தது. ஆனா மனசளவுல திடமா இருந்தார்.

மிஸ்டர் நரசிம்மன்கிட்ட கல்யாண விஷயமா பேசினார். அதற்குப் பிறகுதான் அவருக்கு இப்படி ஆனது.

ஐ திங்க்... தன் முடிவை ஒத்துக்காம தன்னிச்சையா நடந்துண்டதை அவரால தாங்கிக்க முடியலை.

அதோட தான் உயிரோட இருக்கும் போதே சரியாத் தேடாம வேற ஒரு பொணத்தை எடுத்து அவசர அவசரமா காரியம் பண்ணிட்டாங்கறதும் அவரை ரொம்ப பாதிச்சிடுத்து. அதனால அவருக்கு இப்ப தான் யாருங்கறதே தெரியாத நிலை.

அவர் குணமாகணும்னா அவர் விருப்பப்படி எல்லாம் நடந்து அதை அவர் கொஞ்சம் கொஞ்சமா உணரவும் செய்யணும். அப்பதான் சரியாகும்.''

- டாக்டரின் பேச்சு, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்ள வைத்தது.

வத்சலா விசும்பலோடு ''அய்யோ... இப்படி நடக்குமா என்ன... எனக்கு அவரோட சௌக்யம்தான் பெருசு'' என்று கதற ஆரம்பித்தாள்.

ராஜகோபாலனும் நெருங்கிவந்து சீனுவின் கைகளைப் பிடித்தபடி சொல்ல ஆரம்பித்தார்.

''சீனு... போறும். நீ தயவு செய்து உன் அப்பா விருப்பப்படியே நடந்துக்கோ. செத்துட்டார்னு நினைச்சவர் திரும்ப வந்திருக்க, அவரைப் பைத்தியமா ஆக்கின பாவம் எனக்கு வேண்டாம். நானும் சித்ராவும் இந்த ஊரைவிட்டே

போயிடறோம். ஒரு ஆசை ஒரு மனுஷனை இப்படிப் படுத்த வேண்டாம்.''

- சீனு பொறுமையாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டான்.

டாக்டரைத் துளையிடுவதைப் போல கூர்மையாகப் பார்த்தான். அவரை அது என்னவோ செய்தது.

''டாக்டர்... இப்ப நீங்க சொன்னதெல்லாம் நீங்க டயக்னைஸ் பண்ணி சொன்னதா... இல்ல மிஸ்டர் நரசிம்மன் சொல்லச் சொன்னதா?''

- அடுத்த க்ஷணம் அவர் நடுமுதுகில் கத்தி முனையின் கூர்முனை குத்துவதற்கு ஆயத்தமான மாதிரி திடுக்கென்று நிமிர்ந்து பார்த்தார்.

''என்ன பாக்கறீங்க... என் அப்பா இங்க வரும் போதே சித்த பிரமைல இருந்தது எனக்குத் தெரியும். எப்படித் தெரியும்னு பாக்கறேளா?''

- அடுத்த அதிர்ச்சிக்கு அவன் மாறினான். அவர் தடுமாற்றத்துடன் அவனைப் பார்க்க, ''நேத்து காலைலயே அவரை நா[illegible] தோப்புல சுய நினைவு இல்லாம பாத்துட்டேன். எனக்குப் பிறகு அவரைப் பார்த்த நரசிம்மன் காப்பாத்தறேங்கற பேர்ல ஒரு டிராமா போட ஆசைப்பட்டிருக்கார். அதுக்கு நீங்களும் உறுதுணை... அப்படித்தானே?''

- சீனுவின் கேள்வி அவரைப் பொட்டலமாக கட்டிப் போட்டது.

''எங்க அந்த பெரிய மனுஷன்?'' - சீனு பார்வை நரசிம்மனைத் தேடியது. அவர் அங்கே இருந்தால் தானே? நழுவியிருந்தார்.

''டேய்... என்னடா இது? இவரை



உசுரோட பாத்துமா நீ எங்களண்ட எதுவும் சொல்லலை? எப்படிடா உன்னால இருக்க முடிஞ்சது?''

- வத்சலா புலியாகப் பாய்ந்து வந்து அவன் சட்டையைப் பற்றினாள். கூடவே இருந்த பாட்டி இப்படி எல்லாம் துளிகூட பதட்டமே அடையவில்லை. சீனு பாட்டியை அர்த்த புஷ்டியோடு பார்த்தான். தொடர்ச்சியாக-

''இப்ப இங்க நின்னு எதையும் பேச வேண்டாம். அவரை நாம வீட்டுக்கு கூட்டிண்டு போவோம். எல்லாத்தையும் அங்க பேசிக்கலாம்.'' என்றவன் டாக்டரைப் பார்த்தான். அவர் சற்று நெளிய ஆரம்பித்தார்.

''டாக்டர் சார்... டாக்டரா நடந்துக்கப் பாருங்கோ. நரசிம்மன் நிறைய பணம் தரார். ரொம்ப தெரிஞ்சவர்ங்கறதுக்காக இப்படியா?'' என்று அவன் கேட்ட விதம் அவர் முகத்தில் அறைந்தது.

''சரி... நாங்க அவரைக் கூட்டிண்டு போகலாம் இல்லியா?''

''போகலாம். ஆனா ட்ரீட்மெண்ட்டை...''

''வேண்டாம். அவர் பாட்டுக்கு போட்டதை சாப்ட்டுண்டு பேசாம இப்படியே இருக்கட்டும். அவர் திரும்ப சரியானா அப்புறம் ரொம்ப பேர் கதை கந்தலாயிடும்...''

- அவன் பேசும் விதமும் அதன் பொருளும் யாருக்குப் புரிந்ததோ இல்லையோ - ராஜகோபாலனுக்குப் புரிந்தது.

அதன்பின் அம்மாவை சமாதானப்படுத்தி அவரையும் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு

வந்து எல்லோரையும் சமாளித்து முடித்து விட்டு தனியாக இருக்கும் பாட்டியை நெருங்கினான். மொட்டை மாடிக்கு சாதுர்யமாகக் கூட்டிக் கொண்டு போய் மொட்டைக் கோபுரத்தை மௌனமாகப் பார்த்தபடி ஆரம்பித்தான்.

''பாட்டி...''

''என்னடா... எதுக்கு இப்படி தனியா கூட்டிண்டு வந்துருக்கே?''

''காரணமாத்தான்... ஆமா நீ நினைச்சபடி தான் நடக்கலை. நான் நினைச்சபடியாவது நடக்கலாமில்லையா?''

''என்னடா சொல்றே?''

''நீ நினைச்சபடி, எதிர்பார்த்தபடி, ஆசைபட்டபடி இன்னும் இந்த அர்த்தத்துல உள்ள எல்லா வார்த்தைகள்படி அப்பாவைக் காவேரி கொண்டு போயிடலை. அவர் திரும்பி வந்துட்டார். அது போகட்டும். எதுக்காகப் பாட்டி கல்யாணத்துக்கு அவசரப்பட்டே? நான் மனசு மாறி அந்த நரசிம்மாச்சாரி பொண்ணையே பண்ணிப் பேன்னு நினைச்சியா?

அதனாலதான் ஜோசியரை விட்டு 15நாள்ல கல்யாணம் நடந்துடணும்னு சொன்னியோ?''

சீனு இடைவெளிவிட - பாட்டி அவனையே வெறித்தாள்.

''நல்ல வேளை... அப்பாக்கு சுயபிரக்ஞை இல்லை. இருந்திருந்தாதானே கஷ்டம்?''

- திரும்பவும் இடைவெளி விட்டான். பாட்டி முகத்தில் லேசான மாறுதல்கள். கலவர ரேகைகளின் ஊடுருவல்கள்...

''இப்படி பிரக்ஞை இல்லாம அப்பாவை உயிரோட பார்த்தப்போ ஒரு நொடி தடுமாறிப் போயிட்டேன். அது எப்படி



ஜோசியர் அவ்வளவு சரியா சொன்னார்னும் குழம்பிப் போனேன். அப்புறம்தான் புரிஞ்சது. - அவரை ஆத்துல போட்டு அமுக்கித் தள்ளி விட்டதே நீதான்னு...

எங்க சந்தோஷத்துக்காக நீதான் எவ்வளவு பெரிய பாதகத்துக்கு தயாராயிட்டே?

உன்னைப் பாராட்டறதா இல்லை பாத்து பயப்படறதான்னு எனக்குப் புரியல பாட்டி... ஏன் பாட்டி இப்படி பண்ணினே?''

- சீனுவின் கேள்விமுன் பாட்டி விக்கித்துப் போனாள். தொட்டு வளைத்து பொட்டில் அடித்து விட்டானே?

''உனக்கு... உனக்கு எப்படித் தெரியும் நான்தான் அவனை ஆத்துல தள்ளி விட்டேன்னு...''

- படபடவென்று தடுமாறிக் கொண்டு கேட்டாள்.

''தன்னெஞ்சறிவது பொய்யற்கன்னு வள்ளுவர் எழுதியிருக்காரே...? அப்பா இறந்துட்டதா காரியம் பண்ணின அன்னிக்கு தூக்கத்துல உளறிக் கொட்டுனியே... நல்ல வேளை நான் மட்டும்தான் இருந்தேன் அப்போ. அன்னிக்கு எனக்கு சரியாப் புரியல.

ஆனா ஜோசியர் மிகையா சொன்னதையும் அதையும் கூட்டி கழிச்சுப் பார்த்தேன். கணக்கு டேலி ஆச்சு.''

''சீனு...'' - பாட்டி கேவலாக அவனைப் பார்த்தாள்.

''எனக்கு வேற வழி தெரியலைடா. அந்த பணக்காரன்ட்ட நீ அடிமைப் படறதை நினைச்சா தாங்கிக்கவும் முடியலை.

தன் உயிரை வெச்சு உன்னை மிரட்டினான். அதுதான் என்னை வெறுத்துப் போக வெச்சுடுத்து... என் பிள்ளையா இவன்னு ஒரு க்ஷணம் நினைச்சேன். பெத்தெடுத்த

நான்தானே காரணம்னும் தோணித்து. இரண்டு பேருமே ஒண்ணா போயிடுவோம்னுதான் பிடிச்சு இழுத்துண்டு போனேன். ஆனா அந்தக் காவேரி என்னை ஒதுக்கித் தள்ளிட்டா. அவனை மட்டும் கூட்டிண்டு போனா. அதுகூட நல்லதுக்குதான்னு தோணித்து. உங்க கல்யாணத்துக்கு பிறகு அதே ஆத்துல இறங்கி பரிகாரம் தேடிக்கலாம்னு நினைச்சுண்டு இருந்தேன். அதுக்காகத்தான் உன் கல்யாணத்துக்கு அவசரமும் பட்டேன். ஆனா எல்லாம் மாறிப் போயிடுத்தே?''

- பாட்டி பொல பொலவென்று கண்ணீர் கசிய அழுதாள்.

''நீ தானே பாட்டி சொல்வே... வாழ்க்கை ஒரு மர்ம நாவலைவிட திருப்பமும் விறுவிறுப்பும் கொண்டதுன்னு... நீயும் நானும் நினைக்கிறமாதிரி எல்லாம் நடந்துட்டா அப்புறம் நமக்கு அகங்காரம் வந்துடாதா... அப்படி வந்துதானே அப்பா இப்படி ஆகியிருக்கார்?''

- ''போகட்டுண்டா... இதுக்காக எனக்கு எந்த தண்டனை வேணா கொடு. சீக்கிரமா தாலிய கட்டு. பாவம்டா அவளும் அவ அப்பனும்...''

''கட்றேன் பாட்டி. ஆனா நீ காவேரி பக்கம் மட்டும் போயிடக் கூடாது. அதுதான் தண்டனை. போயிட மாட்டியே?''

- அவன் கண்டிப்பாகக் கையாட்டி கேட்டான்.

''எந்தக் கையால என் பிள்ளையை ஒழிச்சுக்கட்ட நினைச்சேனோ அந்தக் கையால அவனை இனி நான் பாத்துக்கற வேலை இருக்கே. அதுவும் கூட ஒருவித பரிகாரம்தானே... நான் எப்படி போக



முடியும்?''

- பாட்டி பதிலுக்குக் கேட்டாள்.

அடுத்த நொடி அவன் அவளைக் கட்டி அணைத்துக் கொண்டான்.

''என்னை ஏண்டா இந்த வயசுல படுத்தறே, சித்ராவை போல இப்படி கட்டிப்பிடிடா...'' என்று அவள் அவனை செல்லமாகக் கோபிக்க, அவன் அதைக் கேட்டு நெடு நாளைக்குப் பிறகு பாரம் நீங்கிய நெஞ்சோடு ஆனந்தமாகச் சிரித்தான்.

பக்கத்து மொட்டைக் கோபுரத்து புறாக்கள் இருவரையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன! சித்ரா அவனை தேடிக் கொண்டு வந்தாள். பாட்டி நழுவ ஆரம்பித்தாள்.

முற்றும்.